294

# ஜகன்மோகினி



REGISTRAR
14 AUG 1943
MADRAS

ஸ்ரீமதி. கி. சாவித்ரியம்மாள்

## இவ்விதழில்

மதுர கீதம் (தொடர்ச்சி)
வை. மு. கோ.

ஜகன்மோகன கோபாலன்
பால லீலைகளின்
அருமை பெருமைகள்
பி. ஸ்ரீ.

ஸ்ரீமதி. கி. ஸாவித்ரியம்மாள்
ஸ்ரீ. எஸ். அம்புஜம்மாள்

தேவி சுசீலை (சரித்திர சிறுகதை
'குகப்ரியை'

திருக்குறள் ஸாரம்
வரகவி பாரதியார்

அன்பளிப்பு (சிறு கதை)
ஸ்ரீ ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்

சந்தோஷ வாழ்க்கைக்கு
தேவை யாது?
"ஸமுத்ரா"

பொன்னடிகள்
'கௌண்டின்ய'

294

Vol. 20. No. 5.
MAY 1943.

சுபானு
சித்திரை

*Jaganmohini*
*The only Ladies' Magazine in Tamil*
*Commands the LARGEST circulation*
*among monthly journals*

JAGAN... OFFICE, SINGAPERUMALKOIL. S. I. R.

JL
N43·20·5

...ரியை-
வை. மு. கோதைநாயகி அம்...

JAGANMOHINI

ஸ்ரீராமஜயம்.

சுபானு ஹூ சித்திரைமீ

மே 1943

மலர் 20 இதழ் 5

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

May. 1943. Vol. 20. No. 5.

# பேப்பர் பஞ்சத்தின் பலன்

1. "மோகினி" பிரசுரங்களில் பலவற்றை, மிக அதிக விலையில் புதிய பதிப்புகள் வெளியிட வேண்டியிருப்பதால், பொதுவாக "மோகினி" வெளியீடுகள் எல்லாவற்றிற்கும் விலை அதிகரிக்கும்படியான அவசியம் மேற்பட்டுள்ளது. 16-வது பக்கத்திலுள்ள புத்தக விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள விலைகள் (1943 பிரசுரங்கள் தவிர) சாதாரண காலத்தில் நிர்ணயிக்கப்பட்டவை. இவ்வாண்டில் சமீபத்தில் வெளியான க்ருபா மந்திர் (ரூ. 1/-), வாத்ஸல்யம் (ரூ. 2/-) மாத்திரம் குறிப்பிட்ட விலைப்பிரகாரமே விற்கப்படும். மற்ற புத்தகங்களின் விலை கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப்பட்டிருக்கின்றன:—

| முன் விலை. | 1-5-43 முதல். |
|---|---|
| ரூ. 2 8 0 | ரூ. 3 8 0 |
| 2 0 0 | 2 12 0 |
| 1 12 0 | 2 4 0 |
| 1 8 0 | 2 0 0 |
| 1 4 0 | 1 12 0 |
| 1 0 0 | 1 8 0 |
| 0 14 0 | 1 4 0 |
| 0 12 0 | 1 2 0 |
| 0 10 0 | 1 0 0 |
| 0 8 0 | 0 12 0 |
| 0 6 0 | 0 8 0 |
| 0 4 0 | 0 6 0 |

2. சந்தா நேயர்களுக்கு குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கு இயலாததால், தபாற்செலவு மாத்திரம் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். வி. பி. கிடையாது. தயவுசெய்து முன்பணமனுப்பவும்.

மோகினியின் முந்திய இதழ்கள் வேண்டுவோர் இதழின் விலையுடன் ஒரு அணு சேர்த்து அனுப்பவேண்டும். முன்பு 2 அணு விற்ற பிரதிகளுக்கு 3 அணுவும், முன்பு 3 அணுவீதம் விற்ற பிரதிகளுக்கு 4 அணுவும் அனுப்பவேண்டும். மானேஜர்.

ஒருநாள் அமரன் வேட்டைக்குச் சென்றிருந்தான். திரும்பிவர ஒருவாரம் செல்லும் என்பது இருவருக்கும் தெரியும். ஆனால் பாதுஷாவுக்குத் தெரியாது. அந்த சமயத்தில் பாதுஷா அவனை அழைக்கும்படி ஒரு தந்திரம் செய்தான் அர்ஜுனன். அரசன் அழைத்தபொழுது வராவிடில் "ஐம்பதுபொன் அபராதம்" விதிப்பது வழக்கம். அமரனே ஊரில் இல்லை. இருக்கிறான் என்றும் அலட்சியத்தினால் வரவில்லை என்றும் போதித்தார்கள். பாதுஷாவும் இவர்களது மாயச் சொற்களை உண்மை என்றே நம்பினான்.

அரசன் மிகுந்த கோபத்தோடு, மறுமுறை சபைக்கு வந்த உடனே "அமர்! நீ சபையை அவமதித்து நடக்கிறாய். இது அழகல்ல. பலமுறை பொறுத்தேன். இனி நீ கூப்பிட்டபொழுது வாராமல் அவமதித்தால் அபராதம் விதிக்கப்படும்" என்றான். அமரன் மிகவும் அமைதியான குரலில் "நான் ஒருநாளும் சபையை அவமதித்ததுமில்லை. அவமதிப்பாய் மனதினால் நினைத்ததுமில்லை. இது வேண்டுமென்றே யாரோ செய்த கற்பனை. உண்மையை உணராமல் அபராதம் என்றால் அதற்கு வாய்ச்சொல்லால் மறுமொழி சொல்லமுடியாது. என் வாள் மறுமொழி சொல்லும்" என்று சொல்லியவனாய் எழுந்து போய்விட்டான். இன்னதுசெய்வதென்று அறியாதவனாய்த் திகைத்துப்போனான் பாதுஷா.

பாதுஷாவின் மனம் குழம்பிக் கிடந்தது. அமரன் சபையைவிட்டு எழுந்து கம்பீரமாய் நடந்துசென்ற அந்தக் காட்சி அவன் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. "உண்மையில் அவன் குற்றவாளியல்ல, இவ்வளவு நாட்கள் பழகியும் அவனை உள்ளபடி அறிந்துகொள்ளாமல் "அபராதம்" என்றேனே. ரஜபுத்ரவீரன் பொறுப்பானா? ஆனால், நானும் அப்படிக் கடுமையாய் அபராதம் விதித்தேன் என்று சொல்லவில்லை. இனிமேல் நடந்தால் விதிக்கப்படும் என்றுதானே சொன்னேன். இதற்கு இவ்வளவு கோபம் வருவானேன்? ஆம்! குற்றமற்றவனை குற்றவாளி என்று நினைத்தால், கோபம்வராமல் என்னசெய்யும்? தீரத்தெளியக் கேட்டுக்கொள்ளாமல் அவசரப்பட்டுவிட்டேனே." என்று எண்ணிப் பெருமூச்செறிந்தான் பாதுஷா...யார் அங்கே? என்றான் அவன். மறுவினாடி 'ஷாஇன்ஷா!' என்று வணங்கி நின்றான் சலபத்கான்.

"அமரஸிம்மனை சதுரங்கம் விளையாடப் பாதுஷா அழைக்கிறார் என்று உடனே அழைத்துவா" என்ற கட்டளை. அவன்முகம் மலர்ந்தது. "இதோ நானே நேரில் சென்று அழைத்துவருகிறேன்" என்று புறப்பட்டான்.

அப்பொழுதே போஜனம் முடித்து தம்பலம் அணிந்தவனாய் வந்து அமர்ந்தான் அமரஸிம்மன். சலபத்கான் கூழைக்கும்பிடுபோட்டு "அபராதம் வசூலிக்க என்னை அனுப்பினார் பாதுஷா" என்றான்.

"அபராதமா? யாருக்கு? அமரஸிம்மனுக்கா? என்ற சொற்கள் கோபக்கனலோடு கலந்து எழுந்தன. முகம் சிவந்தது. உறையிலிருந்து வாளை உருவினான். குதிரையைத் தெருவிலே விடுத்து ஓட்டம்பிடித்தான் சலபத்கான். உருவிய வாளுங் கையுமாய்க் கிளம்பினான் அமரஸிம்மன்.

சலபத்கான் பாதுஷாவிடம் வந்து அமரஸிம்மன் கோபத்தோடு வருவதாக மட்டும் தெரிவிக்கவில்லை. அந்தச் சிறுபொழுதில் அவனைப்பற்றி எவ்வளவு பொய்யும் புனைந்துரையும் சொல்லமுடியுமோ அவ்வளவையும் சொல்லிவிட்டான. அவன் தன்னைப் பின்தொடர்ந்து சபைக்கே வந்துவிடுவானென்று எதிர்பார்க்கவில்லை. இந்த நிலையில் உருவிய வாளுடன் மண்டபத்துள் நுழைந்தான் அமரன்.

ரஜபுத்ர வீரர்கள் வாளை ஒருமுறை உருவிவிட்டால் அதற்கு இரை கொடாமல் உறையிலிடுவதில்லை. சலபத்கானையும் அரசனையும் மாறிமாறிப் பார்த்தான். விஷயம் விளங்கிவிட்டது. மறுவினாடி சலபத்கானது தலை உருண்டோடிற்று. பாதுஷா நடுநடுங்கினான். ஒரே ஓட்டமாய் ஓடி அந்தப்புரத்தில் ஒளிந்தான். அமரனது கோபத்தைத் தணித்தபிறகே பேசவேண்டுமென்று, அவனைச் சமாதானம் செய்யும்பொருட்டு இரஜபுத்திரனாகிய அர்ஜுனஸிம்மனைத் தூது அனுப்பினான். ஆனால் அவன் செயலோ சலபத்கானுக்கும் மேலே போய்

விட்டது. மேல்நடந்தவைகள்தான் நமக்கே தெரியும், பாதுஷாவின் தூதனே யமதூதனுனன்.

அந்தப்புரத்தின் அழகிய அறை, பாதுஷா கூண்டில் அடைபட்ட புலிபோல் அங்கும் இங்கும் உலவுகிருன். நிமிஷத்திற்கு ஒருமுறை செய்தி வந்துகொண்டே இருந்தது. அத்தாணி மண்டபத்தில் அர்ஜுனனும் அமரனும் மடிந்து கிடக்கிருர்கள் என்ற செய்தி அவன் செவிகளுள் விழ்ந்ததோ இல்லேயோ திகைத்துச் செயலற்று நின்றுவிட்டான். எதிர்பாராத இந்தப் பேரிடி அவனே நிலைகுலையச் செய்துவிட்டது. என்னசெய்வதென்று விளக்காமல் தவிக்கலானுன். "அடாடா! அவனைச் சமாதானம் செய்து அழைத்துவரவல்லவா இவனே அனுப்பினேன். இவனே அவனுக்கு எமனுனனே. அமரனேப்போன்ற ஒரு உண்மையான தோழனே இனிக் காணமுடியுமா? சதிகாரர்களின் பேச்சிலே மயங்கி அவனே இழந்துவிட்டேனே" என்று ஏங்கினுன்.

அமரனது மனைவியின் பெயர் சுசீலே. சின்னஞ்சிறு பெண். வயது இருபத்தி இரண்டு. கணவன் அரண்மனையிலிருந்து கோபத்துடன் வந்ததையும் பிறகு அர்ஜுனஸிம்மன் வந்து பேசப் பேச அவன் கோபம் தணிந்து அரசனே நேரில் சந்திக்கப் புறப்பட்டதையும் கவனித்தாள். கணவன் வழக்கம்போல் அரசனுடன் அளவளாவி, தான் சதுரங்கத்தில் அடைந்த வெற்றிகளேப் பேசிக்கொண்டு சிரித்த முகத்துடன் வருவான் என்று எதிர்பார்த்து நின்ற அவள் செவியில் அமரன் மடிந்தான் என்ற சொல் விழுந்தது. எழுந்தாள், விஷயத்தை விவரமாகக் கேட்டாள். ஐயோவென்று அலறவுமில்லே, கண்ணீர் சிந்தவுமில்லே, அவனது உயிர்த்தோழர்களான ஐந்நூறு வீரர்களுக்கு நொடிக்குள் செய்தி அனுப்பினுள். தானும் போர்க்கோலம் பூண்டாள், எல்லோரும் மஞ்சள் உடையணிந்து அந்த அத்தாணி மண்டபத்தையே போர்க்களமாக்கினுர்கள்.

அவளே முன்னின்று போரை நடத்தினுள். அவள் வாள் வீச்சின் எதிரில் நிலேநிற்க முடியாமல் ஓடினவர் பலர். தான் வீசுவதோடுமட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு உற்சாகமளிக்கும் சொற்கள் அவள் வாயினின்றும் ஒலித்தன. அவளது வீராவேசத்துடன் கூடிய இடிக்குரல் அந்த அரண்மனை முழுவதும் எதிரொலித்தது. பாதுஷா நடுநடுங்கினுன். பழிக்குப் பழி என்று தன்னேயே மாய்த்துவிடுவாளோ? ஹிந்துஸ்தானத்தின் சக்ரவர்த்தி ஒரு பேதைப் பெண்ணுடன் போராட நேருமோ? என்றெல்லாம் நினைத்தான்.

முதலில் மொகலாயர்கள் தோற்று ஓடினர். மீண்டும் ஒரு சேனே வரவும் இராஜபுத்ர வீரர்கள் ஒவ்வொருவராய் வீரசுவர்க்கம் புகுந்தனர். இந்த நிலையிலே அவன் உடலேத்தாங்கி தெனபுறவாயிலால் வெளியேறினுள் அவள்.

நடுநிசி, பகலில் நடந்த அந்தக் கொடும்போரின் சின்னங்கள் ஒன்றையுமே அறியாததுபோல், அந்த அரண்மனையும் ஆக்ராநகரமும் அமைதியாயிருந்தன. பாதுஷா தான் பதுங்கிய இடத்தைவிட்டு அசையவேயில்லே. உயிர்த்தோழனது விபரீதமான மரணம் அவன் நெஞ்சையே உருக்கிவிட்டது.

மெக்காவை நோக்கி, "ஆண்டவனே! அமரஸிம்மன் அமரனுகிவிட்டான். நாடுதுறந்துவந்த அவனே நான் தகுந்தபடி கௌரவியாமல் போனேனே! அவன் பொருட்டு என்னே மன்னியும்." என்று வேண்டினுன்.

அதே சமயத்தில் பலகணிக்கு எதிரில் சிறிது தூரத்தில் பளிச்சென்று ஒரு சோதிப்பிழம்பு எழுந்து நின்று உற்றுநோக்கினுன். யமுனையாற்றின் கரை, வீரர்களின் கூட்டம். அதன் நடுவே தீமூண்டு எரிகிறது. மலர்களேத் தூவுகிருர்கள். மணப்பெண்போல் உடைதரித்து தேவி சுசீலே அந்தப் பிழம்பை மும்முறை வலம் வருகிருள். "ஜே! ஏகலிங்க! ஜே! பவானி!" என்ற கோஷம் வானே அளாவுகிறது. மெல்ல மெல்லத் தன் கால்களே வைத்து அமரஸிம்மன் துயிலும் அந்த சிதையில் ஏறிவிடுகிருள் அவள். பாதுஷாவின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகி ஓடிற்று. 'அமரஸிம்ம!' என்ற சொல் பெருமூச்சுடன் கலந்து அவன் வாயினின்றும் எழுந்தது. அந்தத் தீயையே பார்த்து நின்றுன்.



# திருக்குறள் ஸாரம்

வரகவி
திரு-அ. சுப்ரமண்ய பாரதி

## ஊழ்

இது அறத்துப்பாலுக்கு முடிவிலும் பொருட்பாலுக்கு முன்னையுமாய் ஒரு தனி அதிகாரந் தாங்கிய நிலையில் நிலவுகின்ற திந்நூலில், ஊழ் பல பொருள் தருவது. ஆயினும் இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைவதற் கேதுவாகிய நியதியென்ற பொருளில் இதனை விளக்குகிற திந்நூல். ஊழின் வலியே பொருளின்பங்கட்கு முதற்காரணம். அறத்துப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் நடுவே விளங்கவைத்ததும் அக்காரணம்பற்றியேயாம். ஊழைத் தழுவாத மதத்தினரும் தேயத்தினருமில்லை.

1. வகுத்தான் வகையல்லால் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது
2. ஊழிற் பெருவலி யாவுளமற்றொன்று சூழினுந்தான் முந்துறும்

ஆகிய இவ்விரண்டு போதனைகளே சாலும் ஊழின் திறமுணர்தத.

## பொருட்பால்

பொருட்பாலில் **அரசியல், அங்கவியல் ஒழிபியல்** - என மூன்றியல்களில் அரச நீதியை விளக்குகிற திந்நூல் - அரச நீதியென்பது அரசன் காவலை நடாத்து முறைமை - அறத்துப்பாலில் அறத்தை விள்க்கியதுபோல் இப்பாலில் பொருளைப்பற்றி விளக்காமல் அரச நீதியை விளக்கியதேன்?—கவனிப்போம்.

மக்கள் அறம்புரியவும் இன்பம் நுகரவும் பொருள் இன்றியமையாத தாகிறது. ஆதலால் மக்கள் உழவு முதலிய தொழில்களைப் பொருளீட்டச் சாதக மாகக் கொள்கிறார்கள். அரசனும் பொருள் தேடவேண்டியவனாதலால், அவன் அரசுபுரியுந் தொழிலை அதற்குச் சாதகமாகக் கொள்கிறான். அரசுபுரியும் தொழில் சாதாரணமானதல்ல. தக்க துணையின்றிப் புரிதற்கியலாதது. ஆகவே அரசன்—

படை குடி கூழ் அமைச்சு நட்பரணாறு முடையானரசருளேறு

என்றபடி ஆறு அங்கங்களைத் துணையாகக் கொள்கிறான். இவ்வாறனுள் ஒன்று குறையினும் அரசன் தன் நீதியை ஒழுங்காய் நடத்தற்கியலாது. இவ்வாறிற் **பொருளே** ஏனைய ஐந்தனையும் இயக்கவல்லது. ஆதலால் இந்நூல் அரசனை நோக்கி—

1. செய்கபொருளைச் செருநர் செருக்கறுக்கு மெஃகதனிற் கூரியதில்
2. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த வகுத்தலும் வல்லதரசு

என்று போதித்தது. அரசன்—

1. உறுபொருளுமுல்கு பொருளுந் தன்னொன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்

என்ற வழியிலும்—

2. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங்கடிதல் வடுவன்று வேந்தன்றொழில்

என்றபடி குடிகளை வளம்படுமுறையிற் பாதுகாத்து அவர்களிடமிருந்து ஆறிலொன்று *பகுதியாகப் பெறும் வழியிலும் பொருளையடைகிறான். அரசன் பாதுகாக்கவில்லையானால், குடிகள் தங்கள் தொழிலிற் பொருள்தேடி இடையூறின்றி

---

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தானென்றாங் கைம்புலத் தாறோம்பல்தலை என்றதனால் அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று.

வாழமுடியாது. ஆகவே அரச நீதியே பொருளுக்குத் துணைக்காரணமாயது. இதனாலேதான் பொருட்பாலில் அரச நீதியை விளங்கவைத்த திருநூல் - "அரசனெவ்வழி குடிகளவ்வழி" யாமாதலால் அரசனைச் செங்கோலனுக்குவதற்குரிய போதனைகள் பலவற்றை விளக்குகிற திப்பகுதி.

1. அஞ்சாமை யீகையறிவூக்க மிந்நான்கு மெஞ்சாமை வேந்தற்கியல்பு
2. முறைசெய்து காப்பாற்றுமன்னவன் மக்கட்கிறையென்று வைக்கப்படும்
3. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும் நீங்காநிலனாள் பவர்க்கு
4. கொடையளி செங்கோல் குடியோம் பல்நான்கு முடையானும் வேந்தற்கொளி

என இறைமாட்சிகூறி அவன் இந்நிலையில் விளங்குவதன்பொருட்டுக் கொள்ள வேண்டிய நல்ல குணங்களையும் விலக்கவேண்டிய தீயகுணங்களையும் விளக்குகின்ற தரசியல்.

மக்கள் அறிவை யடைந்து உலகம் புகழுமோர் உயரிய நிலையை அடையக் கல்வியே ஆதாரமாம், அரசன் அக்கல்வியை அடைந்து அறிவுடையவனுவே னேல் அவன் தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதனைக்கி, அக் கல்வியை அரசன் கொள்ளவேண்டிய குணங்களில் தலைமையாக்கி அதனை - **கல்வி, கல்லாமை, கேள்வி** எனும் மூன்று அதிகாரங்களில்—

1. கற்ககசடறக்கற்பவை கற்றபின் நிற்க வதற்குத்தக
2. ஒருமைக் கட்டான் கற்றகல்வி யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து
3. விலங்கொடு மக்கள ளனையரிலங்கு நூல் கற்றாரோ டேனையவர்
4. செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்.

என்பன போன்ற சிறந்த போதனைகள் பலவற்றில் விளக்கியது,

இதன்பின் அறிவுடைமை முதலாக இருக்க எழியாமையீறாகப் பல விளக் கப்படுகின்றன. அவற்றுள் பலவுண்டு எடுத்துக்கூற விரிவஞ்சி விருக்கவேண் டியதாயிற்று.

குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்னன் அடிதழீஇ நிற்குமுலகு.

என்று செங்கோன்மையிலும்—

கூழுங்குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச் சூழாது செய்யுமரசு
ஆபயன் குன்றுமறு தொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவானெனின்

எனக் கொடுங்கோன்மையிலும் வெளிவந்துள்ள போதனைகள் - குடிகளுக்கு நீதி மானுன அரசனுடைமையால் விளையும் நன்மைகளையும் அத்தகைய அரசனின் மையால் விளையும் தீமைகளையும் விளக்குவனவாதலால் பாராட்டற் பாலனவாம்.

## அங்கவியல்

இவ்வியல் - அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என அங்கங் களை முறைப்படுத்திக்கொண்டு - அரசனை அவனுடைய அறிவைப்போல் நன்று தீதுணர்த்தி இயக்கவல்லதாகிய அமைச்சு என்னும் அங்கத்தை முதலில் வைத்து - அமைச்சனின் தன்மையில்—

கருவியுங்காலமுஞ் செய்கையுஞ் செய்யு மருவினையு மாண்டதமைச்சு
வன்கண் குடிகாத்தன் கற்றறிதலாள் வினையோ டைந்துடன் மாண்டதமைச்சு

என்பன போன்ற உயர்வினை விளக்கி அதற்குரியனவாய்க் கொள்ளவேண்டிய குணங்கள் சொல்வன்மை முதலாக அவையஞ்சாமையீறாகப் பல என விளக்கு கின்றது. அவற்றுள்—

1. நாநலமென்னு நலனுடைமை யந்நலம் யாநலத்துள்ளதூ உமன்று
2. ஈன்றாள் பசிகாண்பானாயினுஞ் செய்யற்க சான்றோர் பழிக்கும்வினை
3. அழக்கொண்ட வெல்லாமழப்போ மழைப்பினும் பிற்பயக்கு நற்பாலவை

என்பன போன்ற பல சிறந்த உபதேசங்களாக விளங்குகின்றன.

முன்னே குடி, கூழ் என அங்கங்களிற் கூறிய இரண்டையும் - குடி என் றதை அதனையுடைய நாடாகவும் கூழ், என்றதை அதற் கேதுவாகிய பொருளா கவும் கொண்டன திருநூல். ஆதலின் அமைச்சுக்குப்பின் நாட்டைப் பற்றிக் கூறியது. நாடென்பது அரசன் தன் அங்கங்களுடன் நடிப்பதற்குரிய நாடகமேடை போன்றதாம். ஆதலின் அது அரண் முதலிய அங்கட்கு இன்றியமையாதது, அது சிறந்து விளங்குவேண்டுமாதலால் அதனியல்பை— (தொடரும்)

**ஸ்ரீமதி. ஜயலக்ஷ்மி. R. ஸ்ரீநிவாஸன்**

# அன்பளிப்பு

ட்ரிங்! ட்ரிங்! ட்ரிங்! "ஹல்லோ!...ஹல்லோ! டாக்டர் பூபால்! ஆம். ஆம்! கிருஷ்ணசந்திரன்தான் பேசுகிறது...ஆமாம்...இப்பொழுதுதான் இன்ஸ்டிட்யூடிலிருந்து வந்தேன். Yes...இன்றைக்கா...என்ன?...ஹா!...பெயர் என்ன... வள்ளியம்மையா?...சரி...ஹூம்...அய்யோ பாவமே...இதோ இப்பவே வந்துவிட்டேன்...என்ன?...அலேக்ஜாண்டிரா வார்டிலா?...ஆனால் பிழைக்கும் யோசனை இல்லை என்று சொல்கிறீர்...Poor thing...அவள் என் குழந்தைப் பருவத்தில் எனக்கு ஆயாவாகவிருந்தவள்...அல்ல...ஆயாவைவிட வளர்ப்புத் தாயார் என்றால் பொருந்தும்...சரி...இதோ வந்துவிட்டேன்"...'டக்' என்று டெலிபோன் கருவியை யதாஸ்தானத்தில் வைத்தான் கிருஷ்ணசந்திரன். கைக்குட்டையை எடுத்து நெற்றியில் அரும்பிய வெயர்வையை துடைத்துக் கொண்டான். அச் சமயம் காப்பி டம்ப்ளரும் கையுமாய் பிரவேசித்த தனது மனைவியிடத்தில் "இப்பொழுது எனக்கு காப்பிவேண்டியிருக்கவில்லை. மாயா! ஏதோ அர்ஜெண்ட் வேலையா இப்பவே வெளியே போகவேண்டி இருக்கு. டிரைவர் காரை ஷெட்டிற்குக் கொண்டுபோய்விட்டானே, பார்" என்றான். கம்மிய குரலில்.

கணவனின் வேதனை தேங்கிய முகக்குறியைக் கண்டு திடுக்கிட்டவளாய் மாயா "இல்லை, இன்னிக்கு 'ஷாபிங்க்' போகலாம் என்றேனேனுட்டு காரை 'போர்டிகோ'விலேயே நிறுத்திக்கொள்ளச் சொன்னேன்" என்றாள்.

உடனே கிருஷ்ணசந்திரன் பதிலொன்றும் பகராமல் ஜடுதியில் வாசலுக்குச் சென்று 'ஸ்டேண்டி'லிருந்து தொப்பியை எடுத்து தலைமேல் கவிழ்த்துக்கொண்டு "சாம்யூல்! காரை சீக்கிரம் ஜனரல் ஆஸ்பத்திரிக்கு ஓட்டு." என்று உத்திரவிட்ட வண்ணம் காரில் ஏறி 'பின்சீட்டி'ல் அமர்ந்தவன், அப்படியே ஏதோ சிந்தனையிலாழ்ந்தான்.

* * * *

'அப்பொழுது அவனுக்கு சுமார் ஆறுவயதிருக்கலாம். நடுப்பகல் சுமார் பன்னிரண்டு மணியிருக்கலாம், தெருவில் அவனும், அவனுடைய கூட்டாளிகளுமாய் கோலி விளையாடிக்கொண்டிருந்தனர். அதே ரஸ்தாவில் "கிச்சிலிப்பழம் வாங்கலையோ, கிச்சிலிப்பழம்...கிச்சிலிப்பழம் வாங்கலையோ கிச்சிலிப்பழம்" என்று கூவியவண்ணம் போய்க்கொண்டிருந்த பழக்காரி யொருத்தி அந்த குழந்தைகளின் விளையாட்டைக் கண்டு, அவ்விடமே கொஞ்சம்நேரம் நின்றாள். அவர்களின் நடுவில் பூர்ண சந்திரனைப்போல் விளங்கிய உப்பலான மாம்பழக் கதுப்புபோன்ற கன்னங்களுடைய, அழகிய குழந்தையாகிய அவன்மேல் அவளுடைய பார்வை விழுந்தது. விளையாடிக் கொண்டிருந்த அவன் கொஞ்சம் தலையை நிமிர்த்திப் பார்த்தான். பையன் எவ்விதம் பழக்காரியின் உள்ளத்தைக் கவர்ந்தானோ அதேபோல் அவளுடைய கூடையில் அப்பொழுதுதான் உதயமான சின்னஞ்சிறு சூரியர் (குஞ்சுகளை) களை நிறைத்துக்கொண்டு வந்திருக்கிறாளோ என்பதைப் போன்ற ஒளி வீசும் தோலைக்கொண்ட சிறிய தேங்காய்கள் அளவு, கொடகு கிச்சிலிப்பழங்கள் அச் சிறுவனின் உள்ளத்தைக் கவர்ந்தன.

அவன் பழக்காரியைப் பார்த்து "பழக்காரி! பழம் என்ன விலை?" என்றான்.

அவள் அவ்விடமே அருகிலிருந்த திண்ணைமீது பழக்கூடையை இறக்கி, "வாடா என் ராசா! அம்மாவை கூப்பிட்டு பழம் வாங்கிக்கச்சொல். டஜன் ஒன்னரை ரூபாய், அம்முட்டுதான். பழம் எவ்வளவு நல்லா இருக்குதுபாரு! பத்தரை மாற்று தங்கத்தை தோற்கடிக்கிறது. அவ்வளவுமட்டுமா? சூரிய பகவானின் நிறத்தைக்கூட தோற்கடிக்கிறதே. சாப்பிட்டு பார்க்கிறாயா ராசா! கல்கண்டுபோல தித்திக்கும்!"...என்றாள்.

அவன், "வேண்டாம், வேண்டாம். நீ எடுத்துப் போ. அம்மா நான் கூப்பிட்டேன்னு தெரிஞ்சா கோபித்துக்கொள்வாள். பழத்தை பார்த்தா ஆசையாச்சு, அவ்வளவுதான்.

"பாதகமில்லே. எடுத்துக்கொள் ஒரு பழத்தை என் ராஜா!...வெறுமனே எடுத்துக்கொள், உனக்கிஷ்டமானதை" என்று அன்பொழுகக் கனிந்த குரலில் மொழிந்தவண்ணம் அவன் கன்னங்களை அன்புடன் தடவிக்கொடுத்தாள் பழக்காரி. அழகிய தாமரை இதழ்களுக்கொத்த அவனது விசாலமான கண்கள் ஆனந்தமேலீட்டால் இன்னும் அகண்டன. கூடையிலிருந்தும் ஒரு பழத்தை எடுத்து உருட்டி உருட்டிப் பார்த்துவிட்டு, குஷாலாய் குதித்துக்கொண்டே உரித்து, தனது கூட்டாளிகளுக்கெல்லாம் தலா ஒரு சுளை கொடுத்துவிட்டு மிச்சத்தை சப்பு கொட்டிக்கொண்டு சாப்பிட வாரம்பித்தான்.

சிறுவனை கண்கொட்டாமல் சற்றுநேரம் கண்குளிரப்பார்த்து விட்டு, பிறகு அந்த பிரேமமயியான பழக்காரி அவன் கரங்கள் இரண்டையும் பிடித்து கண்களுக்கு ஒற்றிக்கொண்டு முத்தமிட்டு "உன் பெயரென்ன ராசா?" என்றாள்.

"கிருஷ்ணன்"

"கிருஷ்ணன் !...கிருஷ்ணன் ! எவ்வளவு அருமையான பெயர் ! கூட உன் நிறத்திற்கு தகுந்தாப்போல் "சந்திரன்" என்று சேர்க்கவேண்டும். கிருஷ்ணன் கருப்பு, நீ வெளுப்பு. அழகில் கிருஷ்ணனைப்போலவும், நிறத்தில் சந்திரனைப் போலவும் இருக்கிறாய். 'கிருஷ்ணசந்திரன்'தான் என் ராசாவிற்கு தகுந்த பெயர் என்றாள் கொஞ்சும் பாவனையாக. சிறுவனுடன் சற்றுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்துவிட்டு, பிறகு மறுபடியும் 'கிச்சிலிப்பழம் வாங்கலையோ கிச்சிலிப் பழம்'...என்று கூவியவண்ணம் சென்றாள்.

அடுத்தநாளும் அதேசமயம் ரஸ்தாவில் கிச்சிலிப்பழக்காரியின் குரல்கேட்கப் படவே, வீட்டினுள் விளையாடிக்கொண்டிருந்த கிருஷ்ணன்...அல்ல கிருஷ்ண சந்திரன்-வாசல்கதவைத் திறந்துகொண்டு வெளியேவந்தான். கிருஷ்ணனுக்கும் பழக்காரிக்கும் நடுவில் முந்திய நாள் போலவே அன்புகனியும் சம்பாஷணை கொஞ்சநேரம் நடைபெற்றது. பாலகனின் கையில் ஒரு கிச்சிலிப்பழம் வந்து உட்கார்ந்தது. இவ்விதம் அவர்களிருவரின் நடுவிலும் நாளிற்கு நாள் சுக்லபக்ஷத்தின் சந்திரனைப்போல் நட்பு வளரவாரம்பித்தது. பழக்காரிக்கு சிறுவனின் மூலமாக அவனுடைய தாயாரின் பரிசயமும் ஏற்பட்டது. அவனுடைய தாயார் பழம்வாங்கட்டும், வாங்காமல் போகட்டும் தினந்தோறும் அன்பளிப்பாக அவளிடமிருந்து அவனுக்கு ஒருபழம் கிடைத்துவிடும். நாளடைவில் சிறுவனுக்கு பழக்காரியிட்ட பெயராகிய கிருஷ்ணசந்திரன் என்பதே நிலைத்துவிட்டது. அவளும் அவன் குடும்பத்தில் ஒருத்தியாகவே கருதப்பட்டாள். கிருஷ்ணசந்திரனுக்கு ஒருதடவை இரண்டுநாட்கள் ஜுரமாகவிருந்தபொழுது அவனுக்கு ஜுரம் இறங்குமளவும் அவள் அவர்கள் அகத்திற்கு தினத்திற்கு ஐந்தாறு முறையாவது வந்து குழந்தையின் தேகஸ்திதியைபற்றி விசாரித்துக்கொண்டுபோவாள். அந்த இளந்தளிரின்மீது அவள் வைத்திருந்த அளவுகடந்த பிரியத்தைக் கண்ட அவன் பெற்றோர்கள் பேசிக்கொண்டு, அவளை பழவியாபாரத்தை விட்டு விட்டு அவர்கள் வீட்டிலேயே வந்து இருந்துவிடும்படி கேட்டுக்கொண்டனர். அவளும் அதிக மகிழ்வுடன் அன்றையதினமே கிருஷ்ணசந்திரனின் அகத்தில் குழந்தைகளுக்கு ஆயாவாக அமர்ந்தனள்.

வள்ளியம்மை பாவம், சின்னஞ்சிறுவயதிலேயே கணவனை இழந்து, பெங்களூரில் அவளது தமையனின் அகத்தில் வந்து வசிக்கலானாள்-அவள் அண்ணன் பெங்களூரின் பெரிய மார்க்கெட்டில் ஒரு பழ வியாபாரி. அவனுக்கு உதவியாகத்தான் அவள் தினந்தோறும் தெருவு தெருவாக, வெடிக்கும் வெயிலில் அலைந்து திரிந்து பழம் விற்று, பணம் சேர்த்துக்கொண்டு போய் அண்ணனிடம் கொடுப்பாள். அதற்கு அவளுக்கு கிடைக்கும் பிரதிபலன் என்னவென்றால் அண்ணியின் மற்றும் அண்ணனின் வசைச்சொற்கள்தான்.

வள்ளி கிருஷ்ணசந்திரனின் அகத்தில் வேலைக்கமர்ந்தபின்னர் கிட்டுவின் தாயாருக்கு குழந்தைகளைப்பற்றி கவலையே கிடையாது. குழந்தைகளுக்கு வேளா வேளைக்கு ஆகாரம் கொடுப்பதோ, குளிப்பாட்டுவதோ, விளையாட்டு காண்பிப்பதோ, தூங்கவைப்பதோ, பத்து தேய்ப்பதோ, வீட்டை சுத்தம் செய்வதோ சகலமான காரியங்களும் அவளைச் சேர்ந்ததுதான். ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் எப்பொழுது பார்த்தாலும் பம்பரம்போல் சுத்திக்கொண்டு, சிரித்த முகத்துடன் வேலை செய்வதுதான் அவள் சுபாவம். அப்புறம் மூன்று வருடங்கள் கழித்து அவளுடைய மைத்துனன்மார்கள் ஆஸ்தியை பங்குபோட்டுக் கொள்ளும்பொழுது அவளுக்கும் ஏதோ பங்குபிரித்துக் கொடுப்பதாக சொல்லி வந்து, அவளை ஊருக்கு அழைத்துச் சென்றார்கள். அச்சமயம் கிட்டுவின் தகப்பனாரையும் பெங்களூரிலிருந்து மைசூருக்கு மாற்றிவிடவே, அதற்கப்புறம் அவளுடைய தகவலே அவர்களுக்கு தெரியவில்லை. * * * * *

இந்த விஷயங்களனைத்தும் சினிமாப்படம்போல் கிருஷ்ணசந்திரனின் மனக்கண்முன்னால் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிமறைந்தன.

ஜனரல் ஆஸ்பத்திரியின் காம்பௌண்டிலுள் மோட்டார்வந்து நின்றது. டிரைவர் சாம்யூல் கீழே இறங்கி காரின் கதவைத்திறந்து பிடித்துக்கொண்டு "சார், சார்" என்றான். சிந்தனை யுலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்த கிட்டு அவனது குரலைக்கேட்டு திடுக்கிட்டெழுந்து காரிலிருந்து இறங்கி நொடிப்பொழுதில் மாடிப்படிக்கட்டுகளை ஏறி அலெக்ஜாந்திரா வார்டை அடைந்தான்.

வள்ளியம்மை அப்பொழுதுதான் சற்று கண் அமர்ந்தாப்போலிருந்தாள். ஆகையால் டாக்டர் பூபால் கிட்டுவை ஒருபுறமாக அழைத்துச்சென்று அவளுக்கு நினைவுவந்தபொழுது அவள் சொன்னவரலாற்றை கிருஷ்ணனிடம் பகர்ந்தான். போனமாதம் சேலத்தில் திருவிழாவின்பொழுது உன் சித்தியையும், சிற்றப்பாவையும் சந்தித்தாளாம். உன் இருப்பிடத்தை அவர்களிடம் கேட்டு அறிந்துகொண்டாளாம். அவளுக்கு அவள் தாயாதிகளும் அண்ணனும் ரொம்ப மோசம் செய்துவிட்டார்களாம், உன்னிடமேவந்து இருந்தூடணும்னு நீ இருக்கும் இடத்தின் துப்பைத்தேடிக்கொண்டே இருந்தாளாம் "எங்க கிஷ்ண சந்திரனை உங்களுக்கு தெரியுமோ? அதான் கிண்டீ இன்ட்யூடில் (இன்ஸ்டிட்யூடில்) வேலையா இருக்கானுமே? நம்ம சாமிநாதைய்யர் பிள்ளைங்க" என்று நினைவு வந்தபொழுதெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறாள், பாவம். நீதான் இருக்கவேண்டுமென்று எனக்கு நிச்சயம் உண்டாகவே, உனக்கு நாங்குதடவை போன் சேஞ்சேன். டிரெயினில் மூர்ச்சையாகக் கிடந்தானாட்டு காலம்பர ரைல்வே டாக்டர் இங்கே கொண்டு வந்துவிட்டான். டபுல் நியுமோனியா கேஸ் இது.

அதற்குள் கிழவி விழித்துக்கொண்டு லொக் லொக் என்று இரும்பவே இருவரும் கட்டிலை அணுகினார்கள். டாக்டர் பூபால் "பாட்டீ! பாட்டீ உங்க கிருஷ்ண சந்திரன் வந்திருக்கான் பார்" என்றார். "என்...ராசா!" வந்...தா...யாப்...பா என்று கிழவி எழுந்திருக்க முயன்றாள். அதற்குள் இரும்பல்வந்து குறுக்கிட்டது. அத்துடன் சுவாசமும்கூட இழுக்க வாரம்பித்துவிட்டது...

"ரா...சா...கிட்டே...வா. அ...தோ நோக்கு புடவை...தலைப்பிலே...500 ரூ...என்று இருமல் வந்து குறுக்கிடவே மேலே பேசமுடியாமல் இரும்பிக்கொண்டே புடவை தலைப்பை துளாவினாள். அதற்குள்ளாக அவள் தலைமாட்டிலிருந்து ஒரு சம்படத்தை எடுத்து கிருஷ்ணசந்திரனிடம் கொடுத்தாள். அவளது பூர்ண அன்பிற்கும் உரிய ஆசைக்குழந்தை கண்ணும் கம்பலையுமாக அவளது அருகில் நிற்பதைக் கண்ணுற்று, அந்த மிக்க பலவீனமான நிலைமையிலும்கூட அவளது முகத்தில் ஆனந்தக்குறி தாண்டவமாடிற்று.

கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு "உன்...கிட்டையே...இருந்தூடணும்னு (லொக் லொக்) உன் கொழந்தேளை...பாத்துண்டு...சுவமா...(லொக் லொக்) இருந்தூட...லாம்னூ...வந்தேன். (லொக் லொக்) ஒருவாரமா ஜொரம் காயுது... உன்னை...பாத்தூட்டே சாவதூ...ன்னு...அம்மா, அய்யா. எங்கே?" பிரமாத

இரும்பல் வந்துவிடவே நர்ஸ் கொஞ்சம் ஜலம் குடிக்கச் செய்து தலையை சற்று உயர்த்தி பிடித்துக்கொண்டாள்.

கிட்டுவிற்கு துக்கம் மென்னியை பிடித்தழுத்திற்று, தழுதழுத்த குரலில் "அப்பாவிற்கு பென்ஷன் ஆனபிறகு அவாள் எல்லாம் தஞ்சாவூரிலேயே போய் நிலைத்து விட்டார்கள்" என்று சொல்லி முடிப்பதற்குள்ளாகவே கிழவியின் ஆவி போய்விட்டது. நாடியைபிடித்துப் பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் பூபால் வருத்தத்துடன் உதட்டைப் பிதுக்கினுர்.

கிருஷ்ணசந்திரனிடன் தலை கிறுகிறுத்தது. கண்களில் கண்ணீர் மல்கின. "அய்யோ! ஆயா! போய்விட்டாயா" என்று குனிந்து அவளது நெற்றியில் ஓர் முத்தமிட்டான். அந்த இரண்டு அன்புக்களஞ்சியங்களையும் கண்டு அவ்விடத்திலிருந்தவர்கள் பிரமித்துப்போனுர்கள். தாயை இழந்த குழந்தைபோல் பரிதபித்த கிருஷ்ணசந்திரனைக் கண்டு அனைவரும் மனம் உருகினர்.

ஆயா வள்ளியம்மையின் அன்டளிப்பான அந்த ரூபாய் ஐன்னூறுடன்கூட கிருஷ்ணசந்திரன் இரண்டாயிரம் ரூபாய்களை தன் கையிலிருந்து போட்டு "வள்ளியம்மை அனுதை நிலயம்" என்ற பெயரில் புதுமாம்பலத்தில் அனுதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் நிலயமொன்றை ஸ்தாபித்து இனிதே நடத்தி வருகிருன்.

---

ஸ்ரீமதி. ஸமுத்ரா

## சந்தோஷ வாழ்க்கைக்குத் தேவை யாது?

(தொடர்ச்சி)

**ஸரஸா:**—அறிவுவளர்ச்சிதான் சந்தோஷவாழ்க்கைக்கு ஆதாரம். அறிவுவளர்ச்சிக்குச் சிறந்த நூல்கள் ஆதாரம். ஆகவே சந்தோஷ வாழ்க்கைக்கு இன்றியமையாதது கல்விச் செல்வம், இலக்கியங்கள்தான் வாழ்க்கையின் ஆனந்தம்.

**ரங்கு:**—நானும் நீங்களெல்லோரும் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். எனக்கு இப்பொழுதுதான் நினைவு வந்தது. சந்தோஷ வாழ்க்கைக்கு அவசியம் ஆரோக்கியம்தான். என்னமோ நீங்களெல்லோரும் உளறிக்கொட்டுகிறீர்களே.—என்று ஏதோ பெரிய காரியத்தை ஸாதித்துவிட்டமாதிரி கிமிர்ந்து உட்கார்ந்தாள்.

**சுமதி:**—அதெல்லாம் இல்லேடி! பணம்தான் எதையும் செய்யும். பணமிருந்தால் நிறைய சினேகிதர்கள் கிடைப்பார்கள். உன்னத பக்ஷணங்கள் பழவகைகள் சாப்பிடலாம். இலவம்பஞ்சு மெத்தையில் மின்சார விசிரிக்கடியில் தூங்கலாம். பெரிய தோட்டத்துடன் கூடின பங்களாக்களில் வசிக்கலாம். பீச்சுக்குப்போய் காற்றுவாங்கலாம். கோடை விடுமுறையில் கொடைக்கானல் நீலகிரி, பெங்களூர் முதலிய மலைப்பிரதேசங்களுக்குப் போகலாம். அங்கங்கே உல்லாஸமாய் காலங் கழிக்கலாம். இவ்வளவுகூடத் தெரியாமல் தங்கம் என்னமோ பேசுகிருள். பணமில்லாதவர்கள் பேசுவதே தனி தினுசு. தங்கம் பேசுவது திராக்ஷைப்பழம் புளிக்குமென்று நரி சொன்ன கதைதான்.

**தங்கம்:**—எதை வேண்டுமென்றாலும் சொல்லுங்கள். ரங்கு சொன்னபடி ஆரோக்யம் முக்கியம்தான். ஏழை கூலிக்காரன் வீட்டிலிருக்கும் ஆரோக்யமும், திருப்தியும் பெரிய பங்களாவில் வசிக்கும் குடும்பத்திலிருக்கிறதா? 8 அணு கூலி கிடைத்தால் அதில் சமையலுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கி சமைத்து மனைவி மக்களுடன் உண்டு களிக்கிருன். ராத்திரி படுத்துக்கொண்டால் நிச்சிந்தையாய் தூங்குகிறுர்கள். அப்படிப்பட்ட சுகவாழ்வு நம்மில் இருக்கிறதா? நீ சொல்லுகிற பங்களாவாசிகள் அப்படி இருக்கிறுர்களா?

மாஸம் வரும் வருவாயில் 4-ல் ஒருபாகம் டாக்டருக்கும், இன்னும் 1 பாகம் குணம்,அவகுணம் தெரியாத மருந்துக்கும் செலவழிகிறது. சுகமும்,ஆரோக்யமும் உண்டா? வயிறு நிறைய சாப்பிடத்தான் முடியுமா? அம்மாவுக்கு சப்பாத்தி,

ஐயாவுக்கு கோதுமை சாதம், பெரிய பெண்ணுக்கு ஓட்ஸ் கஞ்சி, சின்ன பிள்ளைக்கு பாலும் பழமும், இதற்குமேல் படுக்கையில் படுத்தால் இலவம் பஞ்சு மெத்தையும், மின்சார விசிரியும் கொஞ்சமாவது சுகம் கொடுக்கிறதா? எஜமானர் படுத்துக்கொண்டால் கடன் தொல்லையும், வீட்டுக்கவலையும், வீடு கொண்ட நகைகள், வெள்ளிப் பாத்திரங்களுக்காகத் திருடன் வராமலிருக்க வேண்டுமேயென்ற விசாரமும், உஸ்ஸென்ற பெருமூச்சுடன் புரளுகிறார். எஜமானியோ மறுநாள் என்ன புடவை கட்டிக்கொள்வது, தையல்காரனிடம் பெண்களுக்கு புதுமாதிரி ஜாக்கெட் எப்படி தைக்கச்சொல்வதென்று யோசித்து, யோசித்து மண்டை குழம்புகிறாள். திருப்தியே ஒரு குடிசையில் குடிகொண்டிருக்கிறது. அதிருப்தியே மாளிகையில் தாண்டவமாடுகிறது. 3000 ரூ வருமானமுள்ளவன் 3001 ரூ செலவழிக்கிறான். 4000 வருமானமுள்ளவன் 4001 செலவழிக்கிறான். திருப்தி வேண்டுமானாலும், ஆரோக்கியம் வேண்டுமென்றாலும் நல்ல இதயம் இருந்தால்தான் ஸாத்தியம்.

**ரங்கு:**—அதெல்லாம் போகட்டும் தங்கம்! எதை சொன்னாலும் நல்ல இதயம் என்று முடிக்கிறாயே. நல்ல நவீனங்கள் இருந்தால் போதும். படித்துக்கொண்டே ஸந்தோஷமாய் இருக்கலாமே. பொழுது போவதே தெரியாதே.

**தங்கம்:**—அதுவும் வாஸ்தவம்தான். ஆனால் நல்ல இதயம் இருந்தால்தான் புஸ்தகத்திலுள்ள அருமையான விஷயங்களை ரஸிக்கமுடியும். குறுகிய மனப்பான்மை உள்ளவர்களுககு அதிலுள்ள குறைதான் தோன்றும். நல்ல விஷயங்களை அநுபவிக்க முடியாது.

**சுமதி:**—பணம் இருந்தால்மட்டும் சில அபேக்ஷைகள் கட்டாயம் நிறைவேறும். பொதுக் கூட்டங்களுக்கோ கல்யாண வீடுகளுக்கோ கிளப்புக்கோ எங்கு சென்றாலும் பணமுள்ளவர்களை கண்ணியமாய் நடத்துவார்கள். அப்பொழுது நமக்கிருக்கும் உணர்ச்சி வேறு எதற்கும் ஈடாகாது.

**ஸரஸா:**—அன்பு இருந்தால்தான் வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமாயிருக்கமுடியும். பணத்திற்காக செய்யும் மரியாதை உண்மையானதா? அந்த போலி நடிப்பிலே மெய்யன்பு இருக்கிறதா? அன்புள்ள தாய், தகப்பன், புருஷன், மனைவி, சகோதரர்கள், நண்பர்கள் இருந்தால் வேறு என்ன வேண்டும்?

**தங்கம்:**—அன்பு ரொம்ப அவசியம்தான். முதலில் வீட்டின் தலைவி தன்னுடைய குழந்தைகளை அன்புடன் பராமரிப்பதும், தனக்கு வேண்டியவர்களுக்கு அன்புடன் உதவி செய்து, பிறகு ஏழை எளியவர்களுக்கு அன்புடன் இரங்குவது, இப்படி படிப்படியாய் உயர்ந்து ஸ்வதேசத்துக்காக அன்புடன் தியாகம் செய்வது எல்லாம் ஏற்படுகிறது. அன்பின் அறிகுறி தியாகமல்லவா! இவ்வளவும் எதிலிருந்து வருகிறது? நல்ல இதயத்திலிருந்துதான் என்பதற்கு ஸந்தேகம் உண்டா? சுமதி சொன்னபடி பொது இடங்களில் ஏற்படும் பெருமை, மரியாதையெல்லாம் எத்தனை நாளைக்கு நீடிக்கும்? அதில் வாஸ்தவமான திருப்திதான் உண்டா? கிடையவே கிடையாது. கல்வித்திறனும், நல்ல இதயமும் உள்ளவர்களுக்கு என்றும் திருப்தியும் சந்தோஷமும் நிலையாயிருக்கிறது.

**ரங்கு:**—அப்படியானால் தங்கம்! நிறைய தர்மங்கள் செய்து ஆனந்திப்பது ஒருவகை அல்லவா?

**தங்கம்:**—இல்லையென்று யார் சொன்னார்கள்? தர்மம், தயை, பரந்த நோக்கம், எல்லாம் நல்ல இதயமாகிற மலரின் இதழ்கள். ஒரு ராஜகுமாரி தன்னுடைய பாங்கியிடம் பகவானுக்கு உகந்த மலர் எதுவென்று கேட்டாளாம். அதற்கு புத்திசாலியான பாங்கி

> **"வெள்ளைநிற மல்லிகை அன்று வேறெந்த மலரோ அன்று**
> **உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"**

என்றாளாம். ஆகவே நல்ல இதயம்தான் சந்தோஷத்திற்கு ஆதாரம். நல்ல இதயம் என்ற வேர் பலமாயிருந்தால் தயை, அன்பு, திருப்தி, சந்தோஷம், என்ற எல்லாக் கிளைகளும் உள்ள சந்தோஷமரம் தானாக உண்டாகிறது.

அப்படிப்பட்ட இடத்திலிருக்கும் லக்ஷ்மிக்கும் ஒரு தனி சோபை உண்டாகிறது. ஆனந்தமாய் தாண்டவமாடுகிறாள். அடிப்படையான வஸ்து "நல்ல இதயம்" இருக்கும்பொழுது வேறு என்ன குறைச்சல்!

ரங்கு:—நீதானடி தங்கம் ஜெயித்தாய். உண்மை எங்களுக்கு இதுவரை தெரியவில்லை.

ஸாஸூ:—இன்று பொழுது போனதே தெரியவில்லை.

---


## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

### எழுதிய 60 நாவல்கள்.

**ரூ. 2—8**

- வைதேகி
- ராதாமணி
- சாருலோசனு
- பத்மசுந்தரன்
- × காதலின் கனி

**ரூ. 2**

- நவநீதகிருஷ்ணன்
- × ருக்மிணீகாந்தன்
- சாமளநாதன்
- தியாகக்கொடி
- மங்களபாரதி
- வாத்ஸல்யம்

**ரூ. 1—12**

- சண்பகவிஜயம்
- சௌரீமுகுந்தன்
- ஸாரமதி
- × தயாநிதி
- ஞானதீபம்

**ரூ. 1—8**

- சோதனையின் கொடுமை
- உணர்ச்சிவெள்ளம்
- சந்தோஷ மலர்

**ரூ. 1—4**

- × பரிமளகேசவன்
- உத்தமசீலன்
- இன்பஜோதி
- ராஜமோஹன்
- அனுதைப்பெண்
- × வானக்குயில்
- ஜீவியச் சுழல்
- கஸ்தூரி திலகம்
- கானல் நீர்
- ஆத்மசக்தி
- × புகழ்மாலை
- கலாநிலயம்

**ரூ. 1**

- சுகந்த புஷ்பம்
- சாந்தகுமாரி
- மாயப்ரபஞ்சம்
- சந்திர மண்டலம்
- கருணாலயம்
- க்ருபாமந்திர்

**அணா 14**

- × கோபாலரத்னம்
- புத்தியே புதையல்

**அணா 12**

- கதம்பமாலை *

**அணா 10**

- பட்டமோ பட்டம்
- மகிழ்ச்சி 'உதயம்

**அணா 8**

- நளினசேகரன்
- வீரவஸந்தா
- மூன்று வைரங்கள்
- படாடோபத்தின் பரிபவம்
- × பிச்சைக்காரக் குடும்பம்
- ஆனந்தஸாகர்
- ப்ரேமப்ரபா
- × மாலதி
- வத்ஸகுமார்
- படகோட்டி

**அணா 6**

- பக்ஷமாலிகா
- சுடர் விளக்கு

**அணா 4**

- மாதவமணி
- ஜெயஸஞ்சீவி
- சுகுணபூஷணம்
- அம்ருததாரா
- அன்பின் சிகரம்
- ஸரஸராஜன் *
- உளுத்த இதயம்

கவனிக்கவும்:—உங்களுக்கு வேண்டிய நாவல்களின் விலையை முன் பணமாகவே அனுப்புங்கள். வி. பி. கிடையாது. தபாற்செலவு இனும். பேப்பர் பஞ்சத்தின் காரணமாக சந்தா நேயர்களுக்கு முன்போல இப்போது விலை குறைத்துக் கொடுக்க இயலாததற்கு வருந்துகிறோம்.

× குறிப்பிட்ட புத்தகங்கள் தற்போது கைவசமில்லை

---

**'ஜகன்மோகினி' ஆபீஸ்,**

சிங்கப்பெருமாள் கோவில் B. O.

# 15

**போர்க்களத்தே கீதையமுதம் பொழிந்தகண்ணு போற்றி !**
**போர்க்களத்தே ஞானமார்க்கம் மொழிந்தகண்ணு போற்றி !**
**போர்க்களத்தே விச்வரூப மளித்தகண்ணு போற்றி !**
**போர்க்களத்தே மாயஜாலம் புரிந்தகண்ணு போற்றி !**

என்கிற பாடலை க்ருபாவதி பாடும்போது அவள் மனம் குழைந்து கண்ணீர் தானுக உதிர்ந்ததோடு, இப்பாடலைப் பள்ளிக்கூடத்தில், சுயேச்சைப் பறவைகள் போன்ற சிறுமிகளுடன் தான் பாடிக் களித்தநாளைய நினைவுகள் பளிச் சென்று தோன்றின. தான் அதே மாதிரி இருந்திருக்கக் கூடாதா ! ஏன் இத் தகைய பெரிய இடத்தில்வந்து அடிமையானேம் ! என்று கூடத் தோன்றியது.

அத்தகைய அதீதமான எண்ணம் எழுவதற்குக் காரணம் தன்னைப் பெற்ற தாய், தன் முன்னறிதெய்வம், தன்னல் அவமானமடைந்து மனமுடைந்து பித்து பிடித்தவள்போல் சென்ற காக்ஷி இதயத்தில் ஆழமாக அம்புபோல் பாய்ந்து வருத்தியது.

தாயின் அன்பைத் தடுக்கமாட்டாது வீதிக்கு ஓடி "அம்மா !" என்று ஒரு குரல் அவளை யறியாது அழைத்தாள். ஆனல், மனத்தில் மகத்தான துக்கம், அவமானம், புத்திரவாஞ்சை முதலியன போராடும் மனத்துடன் செல்லும் ராஜம்மாளின் காதில் அம்மொழிகள் விழவே இல்லை.... அதே சமயம் தன் மாமனர் வரும் கார் ஓசை கேட்டதும் கிருபாவதி வீதிப்பக்கத்திலிருந்த மற்றெரு கேட்டின் வழியாக உள்ளே வந்து தன்னறையில் புகுந்தாள்.

அடக்கமுடியாத துக்கம் பொங்கிப்பொங்கி வரும்போது அவளது நினைவை ஆதிகாலம்வரையில் இழுத்துச் சென்றது, "என்னுடைய மதுரகீதம் எனக்கு மகத்தான பதவியைக் கொடுக்கும் என்று எல்லோரும் சொல்லியபடியே அபரிமிதமான பதவியைக் கொடுத்தும் சந்தோஷமோ, நிம்மதியோ ஆத்மார்த்தமான ஆனந்தமோ இல்லாது செய்துவிட்டதே. எல்லாம் காலத்தின் கோலம். கிளியைப் பொன் கூட்டிலடைப்பதற்கு ஒப்பாகவன்றோ என் கதியாகிவிட்டது. ஏ கிருஷ்ண ! போர்க்களத்தில் உனது பரமபக்தனை அர்ஜுனனுக்கு, பற்றும் பாசமும் அற்றுப்போகும்படியாக உபதேசம் செய்ததுபோல் எனது மனமும் இதயமும் பாசத்தை யற்று மறந்துவிடும்படிச் செய்யக்கூடாதா ! என் தாயின் பரிதாப பிம்பத்தை என் கண்முன் காட்டாது மறைக்கமாட்டாயா! என்னல் பரம ஆனந்தத்தையும் உயர்ந்த பதவியையும் அனுபவிக்கவேண்டிய அன்னை தீராத் துயரத்தை யடைந்துவிடும்படியாகிவிட்டதே"... என்று மனமுருகி நொந்து வாடி வருந்தித் துடித்தவாறு மேற்குறித்த பாடலைப் பாடிக் கைத்தொழும் சமயம் விச்வநாதன் அவ்வறையில் எட்டிப்பார்த்தார்.

மருமகளிடம் அவர் வைத்துள்ள ப்ரீதியைக் கூறமுடியாது, தன் மனைவியின் ராக்ஷஸத்தனமும் அவள் செய்யும் கொடுமைகளும் தெரியாமலில்லை. பல தரம் அவளைக் கண்டித்தும் பார்த்தார். பிறவியிலேயே முரட்டுத்தனமும் பிடிவாதமும் ஊறிப்போன மனுஷியுடன் தானும் சண்டைபிடித்தால் குடும்பத்தின் கௌரவமும் குட்டும் குலைந்துபோவதோடு பிறர் சிரிக்கும்படியாகிவிடும் என்பதால் பொறுமையுடன் இருந்தார்.

அன்று ஆபீஸிலிருந்து வரும்போது ராஜம்மாள் சென்ற காக்ஷியைத் தற்செயலாகக் கண்டு அவர் உள்ளம் உருகியது...'வீட்டில் ஏதோ விபரீதமான சம்பவம் நடந்திருக்கவேண்டும்! அதனல்தான் அந்தம்மாள் போகிருள்' என்று தெரிந்துவிட்டது. உடனே காரை நிறுத்தி 'அம்மா ! அம்மா !' என்று ட்ரைவரை விட்டுக் கூப்பிடச்செய்தார்.

ஆனல் ராஜம்மாள் திரும்பிக்கூட பார்க்காமல் ஒரே சோகப் பதுமையாய் ஆவேசத்துடன் போவதைக் கண்டு தானே இறங்கி அவளெதிரில் சென்று "அம்மா ! ஏன் போகிறீர்கள் ? வீட்டிற்கு வாருங்களேன்" என்று கேட்டார்.

ராஜம்மாள் சம்மந்தியைப் பார்த்தவுடனே நடுங்கித் திடுக்கிட்டு அப்படியே நின்ருள். ஏற்கெனவே பலமாகத் தாக்கப்பட்டு அளிந்த புண்ணுகியுள்ள மனது தாங்காது உணர்ச்சி பீறிக்கொண்டுவந்த வேகத்தில் நடுவீதி என்பதைக்கூட மறந்து, "ஸ்வாமீ! பகவான் என்னை ஆதி முதல் சோதித்தது போதாமல் இப்போது தங்கள் தர்மபத்னியும் சோதிக்கக் கிளம்பியதும் என் கர்மந்தான். எனக்கேற்ற ஒரு ஏழைக்கு என்னுருயிர்க் கண்மணியைக் கொடுத்திருந்தால் நான் என்னைவிட பாக்யசாலி உலகிலேயே இல்லையென்று களித்திருப்பேன். பெற்ற வயிறு கேட்காது போனேன். கண்ணுல் கண்டேன். என்னைப் பயித்தியக்காரி என்றும், யாசகத்திற்கும் பிச்சை வாங்குவதற்கும் வந்தவள் என்றும் உங்கள் குடும்ப கௌரவத்தைக் குலைக்கவந்தவள் என்றும் ஏதேதோ சொல்லி என்னைச் சரியான மரியாதையுடன் அனுப்பினுர்கள். இனி இந்த ஜென்மத்தில் இப்பக்கம் வரமாட்டேன். இன்று வந்ததே போதும். "கிருபாவதி பிறந்தாள். பிறந்த சந்தோஷத்தை அளித்து மகிழ்வித்தாள். பணக்காரர் என்கிற பாழுங் கிணற்றில் விழுந்து இறந்தாள்' என்று என் மனம் தேறிவிட்டது. நான் போகிறேன்''...என்று ஆவேசத்துடன் கூறியவாறு திரும்பிக் கூடப் பார்க்காமல் வெகு விரைவாக ஒரு தெருவில் புகுந்து மறைந்தாள்.

பெற்ற தாயின் இதயத் துடிப்பும், ஏழை பணக்காரர்கள் என்கிற படுகுழி போன்ற வித்யாசத்தின் பரிபவமும் விச்வநாதனின் மனத்தை வாள்கொண்டறுத்தன. "உம்...பரிதாபம்! தாயின் இதயம் இப்பாடு படும்போது பெண்ணின் இதயம் எத்தனைச் சுக்கலாக உடைந்ததோ!'' என்று சஞ்சலப்பட்டுக்கொண்டுதான், கிருபாவதியை தினம் காணும் விடுதியில் காணுது அவள் தனி விடுதியில் எட்டிப் பார்த்தார்.

என்னதான் தங்கமும் வைரமும் இழைத்த பெட்டியானுலும் அதைக் குழந்தை ஜெயிலாக எண்ணுமேயன்றி உயர்ந்த பொருளாக எண்ணுமா? தன் சுயேச்சையான விளையாட்டையும் மண் மரம் முதலியவற்ருல் செய்த பொம்மைகளை விரும்புவதுபோல் இந்த பெட்டிக்குள் தான் அடைபடுவதை விரும்புமா!''...என்று எண்ணி ஒரு பெருமூச்சு விட்டார்.

இதுவரையில் மருமகளிடம் ஏதாவது கேட்பார்; அதைச்செய்; இதை செய்...பாட்டுப்பாடு...இதுபோன்ற பொதுவார்த்தைகளைப் பேசிவந்தாரேயன்றி நேருக்கு நேராகப் பேசியது கிடையாது. அன்று அவர் மனம் தவித்த தவிப்பில் அவர் ஆபீஸிலிருந்து வந்ததும் காபி பலகாரம்கூடச் சாப்பிட மனது பிடிக்காது இங்கு வந்தார். படுத்துப் புலம்பிக்கொண்டிருந்த கிருபாவதியே ப்ரமிக்கும்படி சோபா அருகில் வந்து, "குழந்தாய்...கிருபாவதி!'' என்று கூப்பிட்டாரேயன்றி கிருபாவதியின் பரிதாபத் தோற்றம் அவர் நெஞ்சையடைத்து வார்த்தையைத் தடைசெய்து கண்ணீர் பெருகச் செய்தது.

தன்போக்காகத் துயரக்கடலில் கொந்தளித்துக்கொண்டிருந்தவள் மாமனுர் வந்து நிற்பதைக் கண்டு பதறியவாறு சடக்கென்று எழுந்து ஓட வாரம்பித்தாள்.

விச்:—(சற்று சமாளித்துக்கொண்டு) குழந்தாய்...போகாதேம்மா! நானும் உன் மாமியாரைப் போன்று பிசாசல்ல...பயப்படாதேம்மா...நில்லு...அம்மணீ! காணக்கிடைக்காத கற்பகத்தை எங்களுக்குப் பெற்றுக்கொடுத்த தாயாரின் வயிறெரியச்செய்த மகாபாவியைக் கடவுள்தான் காக்கவேண்டும். விஷயம் முற்றும் நான் அறிவேன்...அம்மணீ! பெற்றமக்களின் பாசத்தையும் பெற்ற தாயின் பாசத்தையும் மகா தபஸ்விகளாலும் துறவிகளாலும் கூடத் துறக்க முடியாதம்மா...இந்த விஷயத்தை நானறியாதவனன்று. உன்னை நான் தைரியமாக அனுப்புகிறேன். நீ உன் தாயார் வீட்டிற்குச் சென்று சில நாட்களாவது தங்கிவிட்டு வளைகாப்பு செய்துகொண்டு வாம்மா! பணத்தின்மீது நடக்கும் பாக்யம் பெற்றிருப்பதால் வேண்டுமளவு எடுத்துக்கொண்டுபோ! உன் மாமியாரைப்போல் கடினசித்தம் உன் கணவனுக்கு இருக்காதென்றே நினைக்கிறேன். கிளம்புகிருயாம்மா!

இந்தமாதிரி தன் காதில் ஒரு வார்த்தை விழும் என்று கனவுகூடக் காணுத கிருபாவதியின் உள்ளத்தை இம்மொழிகள் பலவித உணர்ச்சிகளுடன் தாக்கின. அவளால் பதில் பேசவும் தெரியாது குழம்பிப்போய் கண்ணீர் பெருக சில விநாடிகள் நின்ருள்- தன் மாமியாரின் குணமும் மனப்போக்கும் நன்கறிந்தவளாதலால் அடுத்தவினடியே சிறிது மனந்தேறியவளாய் மாமனர் காலில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து "மன்னிக்கவேண்டும். அம்மாவின் விரோதத்தை வளர்த்தவும், மனத்தை நோகச்செய்யவும் நான் விரும்பவில்லை. இந்த மனத்தாங்கல்கள் இன்னும் சற்றுபோனல் மறைந்துபோம். அம்மாவின் பகைக்கு ஆளானல் குடும்ப கௌரவமே குலைந்து, குட்டும் கோபியமுமாக இருக்கும் அழகு சிதறி என்றென்றும் மறையாத விகாரமாகிவிடும், இந்த யோசனை வேண்டாம்... அம்மாவும் நீங்களும் இருக்கும்போது எனக்கென்ன குறைவு! வீண்கவலை வேண்டாம் மாமா!"... என்று தழதழத்த குரலுடன் கூறிக் கண்ணீர் வடியநின்ருள்.

**விச்:**—அம்மா! உன்னுடைய விலையிலாத குணத்தழகைப் புகழ்வதா? அபரிமிதமான சாந்தத்தைக் கொண்டாடுவதா? இத்தனை அத்புதமான மருமகளிடம் பாடங் கற்றுக்கொண்டு உன் மாமியார் வாழவில்லையே என்று நான் விசனிக்கிறேன். அவள் கிடக்கிருள் மூர்க்கம்... நீ உன் கணவனிடம் கேட்கப் பயந்தால் நான் கேட்கிறேன். நீ உன் தாயாரிடம் போய்வாம்மா!... என்ன விருந்தாலும் பெற்றதாயின் பாசம் லேசனதா...

**க்ருபா:**—மாமா! நாற்று ஒரு இடத்தில் உண்டாக்கி, பெயர்த்து மற்றொரு இடத்தில் நட்டுவிடுவதுபோல் பெண்களும் ஒரு இடத்தில் பிறந்து இன்னொரு இடத்தில் புகுந்து வாழ்வதனல்தானே நாற்றுப் பெண் என்று பெயர் உண்டாகியது. இனி எனக்கு இந்த இடந்தானே சகலமும். பெரியவர்களை த்வேஷித்துக் கொண்டு நான் சந்தோஷமடைந்தாலும் அது துக்கமயமாகவே தோன்றும்.

என் தாயார் செய்த பாவத்தை அவள் அனுபவிக்கின்ருள். அதற்கு யார் ஜவாப்தாரி?... ஐயோ! அதோ அம்மா கூப்பிடுகிருர்... என்று பயந்து நடுங்குவதற்குள் காளிகாதேவியைப் போன்ற ஸ்வரூபத்துடன் பார்வதியம்மாள் இடுப்பில் ஒரு கையும் மோவாய்க்கட்டையில் ஒரு கையும் பொருத்தியவாறு கண்கள் தீப்பொறி பறக்க அங்கு வந்து நிற்பதையும் முகத்தில் க்ரூரம் ஜொலிப்பதையும் கண்டு கிருபாவதியின் கர்ப்பம் கலங்கிவிடும்போலவே ஆய்விட்டது.

அதே சமயம் பெரிய இடி இடிக்கும் பீரங்கி த்வனியில், "ஐயையோ! க்ரக சாரமே, வெட்கக்கேடே! வயித்தெரிச்சல்கூத்தே!... இந்தமாதிரி ஸாகஸ நாடகம் ஆரம்பித்து எத்தனை நாளாயிற்று?" என்கிற குரல் கேட்டதும் உண்மையில் கிருபாவதியின் வயிற்றில் ஒரு இடி இடித்தமாதிரியே இருந்தது.

"ஓகோகோ! மாமியாரிடம் பலியாத காரியத்தை மாமனரிடம் சாதித்துக் கொள்வதற்கு எத்தனை நாளாய் மரியாதை மட்டின்றி பழகி வருகிருய்?...பேஷ். நாலுபேர் பார்த்தால் வெறுமனே சிரிக்கமாட்டார்கள். கையைக்கொட்டிக் காரியுமிழ்ந்து சிரிப்பார்கள்... இந்த அறியாத பெண்ணேடு உங்களுக்கென்னபேச்சு! இதென்ன வெட்கக்கேடு நாடகம்!" என்று பெரியதொரு கர்ஜனை செய்தாள்.

இந்த அநியாயமான வார்த்தையைக் கேட்டுச் சகியாத விச்வநாதன் பொங்கிவரும் ஆத்திரத்தோடு தடதடவென்று பார்வதியம்மாளின் அருகில் வந்து, "நாசகாலி! உனக்கு ஆன வயஸை அடுப்பில் எரிக்க... என்ன நெஞ்சழுத்தமாய் பேச வந்துவிட்டாய்! எல்லோரும் உன்னைப் போன்ற அற்பப் புழுக்கள் என்று எண்ணிவிட்டாயா! நாக்கை அடக்கிப்பேசு. மரியாதைகெட்டுப் போய்விடப்போகிறது. பிறகு உன் வார்த்தையே உனக்கு விபரீதமாகமுடியும். பத்திரம்" என்று கூவியவாறு முதுகில் பளார்பளாரென்று நான்கறைகள் தம்மை மீறி வைத்துவிட்டுத் தடதடவென்று சென்ருர்.

பார்வதியின் நிலைமை எப்படித்தானிருக்கும்? கூறமுடியாத துக்கம் தொண்டையடைக்க பெரிதாகப் பிலாக்கணம்போல் பாடியழுதவாறு முணு

முணுவென்று வசைமாரியைப் பொழிந்தபடியே சென்றாள். இந்த பயங்கரக் காக்ஷியைக் கண்டதும் கிருபாவதிக்குப் பின்னும் கதிகலங்கியது.

## 16

சாதாரணமாகவே புதிய வாழ்க்கையில் பிரவேசித்த எந்த பெண்மணிகளும் புதிய இன்பத்தில் திளைந்து எப்போதும் சந்தோஷமாகவே காணப்படுவார்கள். எங்கோ சிலருக்கு சந்தோஷத்திற்குப் பதில் சங்கடமும் உண்டாவதுண்டு. யுவதிகளின் ஆனந்தமே அவர்களுக்குப் பின்னும் அதிகரித்த அழகையும் புதியபுதிய களையையும் அழியாத யௌவனத்தையும் கொடுத்துக் களிப்பிக்கச் செய்யும்.

கர்ப்பவதிகளுக்கு சந்தோஷமும் உத்ஸாகமும் அதியவச்யம். அதிலும் முதல் முதல் கர்ப்பமாகியுள்ள யுவதிக்கு ஓயாது சந்தோஷமும் புதிய உத்ஸாகமும் குன்றாதிருப்பதற்காகவே நம் பெரியோர்கள் கர்ப்பம் தெரிந்த நாள்முதல் அவளை வெகு செல்வமாக வளர்ப்பதும், இஷ்டமான பலகாரங்கள், உடைகள், செய்துத் தருவதும் தாய்வீடு, மாமன்வீடு, அத்தைவீடு, ஆப்தசினேகிதர்கள் வீடு முதலியவற்றிற்குச் செல்வதும்; ரவிக்கை தைப்பது, தலைவாரிப் பின்னுவது, நிலாச்சாப்பாடு வைத்தல், வளைகாப்பு செய்தல், புஷ்பம் தைத்தல், சீமந்தம் செய்தல், அப்பம் சமைத்தல் முதலிய பல சடங்குகளைச் செய்து விருந்துகள் நடத்தி அளப்பரிய ஆனந்தத்தை உண்டாக்கும் மார்க்கங்களை சாஸ்திரத்தின் மூலமும் சம்பிரதாயத்தின் மூலமுமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இதனால் கர்ப்பிணிக்கு ஓயாது சந்தோஷமும் தெம்பும் மனோல்லாஸமும் ஏற்பட்டு வயிற்றிலுள்ள சிசு அந்த ஆனந்த சக்தியில் வெகு செழிப்பாகவும் ஆரோக்யமாகவும் அறிவுடனும் வளரும் என்ற கருத்து நன்கு விளங்குகிறதல்லவா! ஆனந்தமே ஆரோக்யத்திற்கும் அஸ்திவாரம் என்பதைக் கூறவேண்டுமா!

ஏழைகளாயினும், செல்வவந்தவர்களாயினும் அவரவர்களுக்குத் தக்க முறையில் கர்ப்பிணிகளை த்ருப்திசெய்து மகிழ்வார்கள். ஏழையின் வயிற்றில் பிறந்து ஏகாத்திரியமான செல்வத்தில் புகுந்தும் கிருபாவதியின் பரிதாபம், அவள் பூர்வஜென்மத்து வினை என்றுதான் சொல்லவேண்டும். அன்று தனது போதாக் காலத்திற்குத்தான் தன் தாயார் இங்கு வந்தாள் என்றே தோன்றியது.

மாமனார் ஒருநாளும் இல்லாது திருநாளைப்போல் தன்னைத் தனிமையில் ஏன் சந்தித்துப் பேசவேண்டும், என்று நினைக்கும்போது அவள் மனது சஞ்சலப்படாது என்ன செய்யும்? மாமனார் அடித்த வேகத்துடன் சென்ற மாமியார் வெட்டவெளியான மொட்டைமாடியில் போய் படுத்தவள் திரும்பி எழுந்து வரவேயில்லை. வீட்டின் தலைவி சந்தோஷ விதையை நாட்டிக் களிப்பிக்கச் செய்யவேண்டியவள் கைகேயியைப்போல் கோபாவேசத்தையடைந்து படுத்துக் கிடந்தால் வீட்டில் சந்தோஷமேது ! களையேது ! தெம்புதான் ஏது ?

யார் முகத்தைப் பார்த்தாலும், பறிகொடுத்ததுபோன்றும், எண்ணெய் குடித்ததுபோன்றும், எள்ளும் கொள்ளும் வெடிக்கும் ஆக்ரோஷப் பதுமை போலும், சோகமே உருவான பரிதாப பிம்பம்போலும் காணப்படுகையில் அவ்வீட்டின் நிலைமையைக் கூறவேண்டுமா !

இரவு முற்றும் எத்தனையோ கெஞ்சிக்கூத்தாடியும் பார்வதியம்மாள் அசையவில்லை. "எனக்குச் சோறு வேண்டாம். பட்டினி கிடந்து சாகத்தான் போகிறேன். ஒரு சமையல்காரியின் மகளைக் கட்டியதற்கு பிராயச்சித்தம் இதுதான். என்னை உருகவேண்டாம். உன் மாமனாரைக் கைவசம் செய்துகொண்டு உன் அட்டகாஸத்தைச் செலுத்து !" என்று சுடுசரம்போல் சொல்வதைத் தாங்க மாட்டாது கிருபாவதியின் இதயம் தத்தளித்தது.

நிஷ்களங்கமான இதயங்களையெல்லாம் களங்கப்படச் செய்து புண்படுத்தி விட்டால் யார்தான் அதைச் சகிக்கமுடியும்? கிருபாவதியும் அன்று பட்டினி

கிடந்தாள். கர்ப்பவதிக்கு இதுவே மகத்தான சந்தோஷமல்லவா! மாமனரிடம் ஓடி அவர் காலில் விழுந்து, எப்படியாவது மாமியாரைச் சாப்பிடும்படிச் செய்ய வேண்டும் என்று கெஞ்சினாள்.

**விச்:**—குழந்தாய்! மனிதனின் ஆத்திரத்தைச் சோதிப்பதற்கும் ஓர் எல்லையுண்டு. இந்த பத்ரகாளித்தனத்திற்கும் ஒரு வரம்பில்லையா! இதன் பலன் யாரைத் தாக்கும் என்பதை யோசிக்காது செய்யும் சதியை அனுபவிக்கட்டும். பட்டினி கிடப்பதால் சாகமாட்டாள். பயப்படாதே. அத்தகைய நல்ல காலம் என் வாழ் நாளில் கிடைக்காது, ஆதிகாலம்முதல் என் தாயார், சகோதரிகள், பந்துக்கள் முதலியவர்களிடம் இவள் ஆட்டிவைத்த ரணமே இன்னும் ஆறவில்லை. அதற்குள் மறுபடியும் ஆரம்பித்துவிட்டாள்.

கிருபாவதி! நீ பயப்படாதே. தானுக எழுந்து வந்து நாய்போல தின்னுவாள், பட்டினி கிடக்க இவள் மகாத்மா காந்தியல்லவா! அந்த மகா புருஷனைச் சொல்லிய வாயால்கூட இந்த ஊற்றைப் பிண்டத்தைச் சொல்லக் கூடாது. நீ தூங்கப்போம்மா! முரளி எங்கு சென்றான்? ஏன் இன்னும் வரவில்லை?'' என்றார்.

**கிரு:**—மாமா! அவர் இன்று வருவதற்கு நேரமாகும் என்று சொல்லிவிட்டுத் தான் போனார். அம்மா இப்படி இருந்தால் என்னையல்லவா உலகம் நிந்திக்கும்... எத்தனை கெஞ்சியும் வரவில்லையே! பனியில், மொட்டை மெத்தையில் படுத் திருப்பது உடம்புக்கு ஆகுமா!

**விச்**—அம்மா! நான் அந்தப் பிசாசினிடம் பட்டுப்பட்டு என் தலை பொட்டை பறந்துவிட்டது. நீ புதிதாகப் பார்ப்பதால் நடுங்குகிறாய்! நீ இச்சமயம் இவ்வாறு விசனிப்பது சற்றும் தகாது, கோயிலில் வைத்துப் பூஜை செய்ய வேண்டிய குழந்தையாகிய உன்னை அருமை தெரியாது நடத்துவதை என்மனம் பொறுக்கவே இல்லை. நீ கவலைப்படாது போய் படுத்துக்கொள்ளம்மா...நீ சாப்பிட்டாயா இல்லையா!

**கிரு:**—இல்லை மாமா!...அம்மா பட்டினிகிடக்க எனக்குமட்டும் எப்படி சாப்பாடுபிடிக்கும்? எனக்காக சற்றுவந்து கூப்பிடக்கூடாதா! உங்களைக் கெஞ்சு கிறேன். சற்று வாருங்கள் மாமா!...என்று கூறும்போது கண்ணீர் வழிந்து ஓடுவதை கண்ணாடிக்கு ஒப்பான பளபளப்பான கன்னம் எடுத்துக்காட்டியது.

இதைக் கண்டு விச்வநாதன் மனம் பரிதபித்தது. நேரே மொட்டை மாடிக் குச் சென்று "பார்வதீ! இதுதான் நீயும் நானும் பேசுவதும் சந்திப்பதும் கடைசீ தரம் என்று சத்தியமாக நினைத்துக் கொள்ளு. கர்ப்பவதியாயிருக்கும் குழந்தைக் காகவாவது உனது அசட்டுப் பிடிவாதத்தை விட்டுவிட்டு எழுந்துவா! கிருபாவதி சந்தோஷமாயிருந்தால்தானே குழந்தை அழகாகப் பிறக்கும், அதைக்கூட கவனிக்கவில்லையா! அழகுக்கு அடிமையாகிய உனக்குக்கூடவா சொல்ல வேண்டும்!''...என்று ஏதேதோ கூறிக் கெஞ்சியதெல்லாம் வீணாகிவிட்டது. பதிலே பேசவில்லை.

இதுபோன்ற சம்பவங்களைப் பலதரம் அவர் பார்த்திருக்கிறபடியால் அவருக்கு வியப்பொன்றும் தோன்றவில்லை. அதே சமயம் முரளி வந்தான். அவ னுக்கும் இது புதிதில்லையாகையால் ஏனென்றுகூடக் கேட்காது தன் வேலையை முடித்துக்கொண்டு சென்றான்.

புதிதாகப் பார்க்கும் கிருபாவதிக்குத்தான் பாவம் கதிகலங்கியது. மிகவும் பயந்து தவித்தவாறு கணவனிடம் வந்து வேண்டினாள். ஒன்றும் சாயவில்லை. கிருபாவதியை வெளியேவிடாது நிறுத்திக்கொண்டான். நடுநிசியில் பசி தாங் காது பார்வதியம்மாள் பூனைபோல் சமயல் உள்ளே போய் திருட்டுத்தனமாகச் சாப்பிடுவதைக் கண்ட விச்வநாதன் இந்த காக்ஷியை கிருபாவதிக்கும் முரளிக்கும் காட்டி அந்த சம்பவத்தையே வைத்துக்கொண்டு பார்வதியம்மாளை ஏசிப்பேசி மானத்தை வாங்கிவிட்டார்.

சமயத்திற்கு ஏற்றாற்போல் பார்வதியம்மாளின் தமயனின் சஷ்டிபூர்த்தி கல்யாண அழைப்பு வந்ததால் பார்வதி நான்குநாள் முன்னதாகவே போய்விட்டாள். இந்த பெரிய புசல் காற்று ஒருவாறு அடங்கியது என்று எல்லோரும் அகமகிழ்ந்தார்கள். முக்யமாக கிருபாவதியின் உள்ளந்தான் பூரித்தது. இப்படியும் ஒரு ராக்ஷஸி உலகில் இருப்பார்களா! என்று வியப்பு பொங்கியது.

## 17

கிருபாவதியை மூச்சுத்திணறும்படிக்குச் செய்துவிட்டாள் கண்ணம்மாள். "இந்த கோலத்தில் உங்களைப் பார்க்கத்தான் நான் இரவு பகல் தபம்கூடச்செய்தேன். என்னுயிர் முரளியை இன்னும் தகப்பனாக்கவில்லையே என்று கடவுள் மீதுகூடக் கோபித்தேன். பேஷ்! முரளி இந்த சந்தோஷச் செய்தியைக்கூட ஒரு கடிதம் எழுதியிருக்கக்கூடாதா! உன் அப்பா எழுதியபிறகுதானே தெரிந்தது. அத்தனை வேலையா உனக்கு. என்னை மறந்தேபோய்விட்டாயா! உங்களிடமிருந்து கடிதமே வராததைப்பற்றி என்னைவிட கண்ணம்மாள்தான் அதிகமாகக் கவலைப்பட்டுத் தவிப்பாள்" என்று மிகவும் பரிசுத்தமான இதயத்துடன் நாகராஜன் வழக்கம்போல் முரளியிடம்கூறி அவனை மார்புறத்தழுவிக்கொண்டான்.

முரளிக்குத் தாயாரின் போதனையினால் ஒரு சிறு கரும்புள்ளி லேசாக அப்போது பாய்ந்ததெனினும் அவனுடைய பழய அன்பை மறக்கமுடியாது தவித்தான். நாகராஜன்மீதுகூட இத்தகைய குற்றம் இருக்குமா! என்றே பல சமயங்களிலும் தோன்றும். எதற்கும் சகஜபாவத்தில் பிரிந்துவிடுவது நன்மையே உண்டாக்கும் என்றும் அவனுக்குத் தான் ஒரு பெரிய உதவி செய்யவேண்டும் என்பதை நிறைவேற்றும்பொருட்டும் பிரித்து அனுப்பினான்.

இன்று நாகராஜனை நேரில் கண்டதும் மத்தியில் உண்டாகிய களங்கம் அடியோடு மறைந்துபோய் ஆதிகாலத்தில் ஊன்றிய அன்பே தலைதூக்கி நின்றது. அவனை தடபுடலாக உபசரித்துக் கட்டியணைத்தான். இதைக்கண்ட கிருபாவதிக்கு ஆச்சரியமாகவிருந்தது.

விச்வநாதனுக்கு என்றும் ஒரே சீரான அன்பு இருந்ததால் அவர் நாகராஜனிடம் பழயபடியே இருந்தார். பத்திரகாளியம்மாள் ஊரிலில்லாததால் கலவரங்களுக்கோ, கலகத்திற்கோ இடமில்லாது போய்விட்டது. முரளியும் நாகராஜனும் பழயமாதிரியாகவே வெகு சகஜமாகப் பழகுகிறார்கள் என்றாலும் கிருபாவதிக்கு மட்டும் உள்ளுக்குள், தன் மாமியார் வந்தால் என்ன நடக்குமோ! என்கிற திகில் பூராவாகவிருந்தது. அதனால் நாகராஜனிடம் தாராளமாகப் பேசவும்முடியாது, பேசாதிருக்கவும்கூடாது தவித்தாள்.

தன் தாயார் நாகராஜன்மீது கூறியதெல்லாம் வெறும் புகார் என்றும், தான் நல்லவேளையாக அதற்கு அதிகம் செவி சாய்க்காது ஒருமாதிரியாக நடந்துகொண்டதே மேல் என்றும் முரளிக்குத் தோன்றியது. நாகராஜன் ஒருமாதம் லீவில் வந்திருப்பதால் முரளியும் லீவு எடுத்துக்கொண்டு வெகு உத்ஸாகமாக இரண்டு ஜோடி தம்பதிகளும் ஆனந்தமாகவே இருந்தார்கள்.

நாகராஜன் கிருபாவதியைத் தாயார் வீட்டிற்குச் சகல சௌகரியங்களையும் செய்துகொடுத்து அனுப்பும்படியும், ஒத்தாசைக்குத் தன் மனைவியைக் கூட அனுப்புவதாயும் முரளியிடம் கூறினான்.

முரளி:—அனுப்புவதைப்பற்றி எனக்கு ஆக்ஷேபனை இல்லையப்பா! இங்கு நடப்பதைப்போல் அங்கு நடக்காது ஒன்று. இரண்டாவது, அம்மாவின் விஷயந்தான் உனக்குத் தெரியுமே! வீணான சண்டைகள் இப்போதே நடக்கிறதில் குறைவில்லை. இன்னும் அதிகமாகிவிடும். அம்மா ஒருத்திக்காகத்தான் பார்க்கிறேன். அவளுக்கு என்னைத் தவிர இன்னும் பிள்ளையோ பெண்களோ இருந்தால் நான் லக்ஷ்யம் செய்யமாட்டேன். என் ஒருவனையே நம்பியுள்ள அவளை விரோதித்துக்கொண்டால் உலகம் தூற்றுவதோடு நிற்காது

ர்ஸாபாஸமாகமுடியும். அதற்காகத்தான் யோசிக்கிறேன். இன்னும் போகப் போகப் பார்க்கலாம்—என்றான்.

கிருபாவதியின் மனக்கவலையின் மத்தியிலும் அவளது மதுரகீதம் மட்டும் அன்றுடம் புதிய புதிய இன்பத்துடன், புதிய மெருகுடன் ப்ரகாசித்ததேயன்றி குறைவில்லை. நாகராஜன் இந்த லீவுமுற்றும் முரளியுடனேயே இருந்து கழிப்பதற்காக வந்தான்.

இவன் வந்து பத்து தினங்கள்வரையில் வெகு உத்ஸாகமாயும் அன்யோன்யமாயும் காலம் கழிந்தது. அதன்பிறகு அந்த ஆனந்த வாழ்க்கைக்கு முள்வேலிபோடும் மூர்க்கதேவதையாகிய பார்வதியம்மாள் வந்துவிட்டாள்.

களங்கமற்ற மனத்தையுடைய நாகராஜன் பழய அன்புடன் "மாமீ! நமஸ்காரம்" என்று வணங்கினன். முரளியும் அவனும் ஒரே தட்டில் டிபன்வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போதே பார்வதியம்மாளின் வயிற்றில் இடி இடித்ததுபோலாகிவிட்டது. 'இந்த படுபாவி எப்போது வந்து சேர்ந்து விட்டான்?' என்று மனது குமுறினள். நமஸ்காரம் என்று அவன் கூறியதைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், அவனை அப்படியே சபித்துவிடுபவள்போல் விரைத்துப் பார்த்தபடியே "எழுவெடுத்த வீடு இந்த வீடு, இதுவீடா! இல்லை! இல்லை...குடிகேடிகள், சோதாக்கள், தண்டசோற்றுத் தடிராமன்கள் முதலியவர்கள் கும்பல்கூடி தண்டபிண்டத்தை உண்டு உருட்டும் வீடல்லவா! மானம், மரியாதை எதுதான் உண்டு!" என்று உரத்த குரலில் கூறிக்கொண்டே உள்ளே போனள்.

நாகராஜன் பாடு ஒருமுழம் தூக்கிப்போட்டது. "என்னடா முரளீ! இன்னுமா என்மீது த்வேஷம் வாங்கவில்லை? இத்தகைய கடுமையாகப் பேசுகிருர்களே! அழகான பேரன்கூடப் பிறக்கப்போகிறது. இன்னுமா பழய பகை?"...என்று கையிலுள்ள பலகாரத்தைத் தின்னமலேயே அப்படியே தம்பித்தான். என்னதான் சினேக முறையில் மனது பண்பட்டிருப்பினும் இத்தகைய வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன.

முரளிக்கு என்னபதில் பேசுவதென்றே தெரியவில்லை. 'இதைவிட விபரீதமாக அவள் கூறியுள்ள மற்றொரு பாணம்போன்ற வார்த்தையைக் கேட்டால் அவன் கதி என்னகுமோ! இதற்கே இப்படி இடிந்துவிட்டானே!' என்று நினைத்து முகத்தில் அசடுவழிய மூணும்பேஸ்த்து வைத்ததுபோல் உட்கார்ந்திருந்தான்.

பார்வதியம்மாள் உள்ளே முணுமுணுத்துக்கொண்டு போகும்போது கண்ணம்மாள் கிருபாவதிக்கு புஷ்பங்கள் வைத்துத் தலை பின்னியபடி வெகு சந்தோஷமாகச் சிரிப்பும் விளையாட்டுமாகப் பேசிக் கொண்டிருந்தாள். இந்த காக்ஷி இந்த அம்மாளுக்குப் பொறுக்க முடியுமா! நாகராஜன்மட்டும் வந்திருப்பதாக நினைத்தாள். கண்ணம்மாளையும் பார்த்த உடனே ஆக்ரோக்ஷம் பிய்த்துக் கொண்டு வந்தது. கையிலிருந்த மூட்டையை தடார் என்று கீழே போட்டவாறு, "ஐயையோ! என் குடியைக் கெடுத்தது போதாதென்று தம்பதி சகிதம் குலாவ வந்துவிட்டார்களா!"...என்று கூறியபடியே இடுப்பில் இரு கைகளும் பதித்தவாறு, "சரிதான். சரியான கொட்டம் அடிக்கிருப்போலிருக்கிறது" என்று அவள் கூறுவது சரியாகக் காதில் கேட்காத கண்ணம்மாள், சகஜமான குரலில் "மாமீ! வாங்கோ! வாங்கோ! இன்னும் நீங்கள் வரவில்லையே என்றுதான் எதிர்பார்த்திருந்தோம். உங்களுக்கு அழகு மயமான பேரன் பிறக்கப்போவதை நீங்கள் யாரும் தெரிவிக்காவிட்டாலும் மாமா எழுதினர். உடனே கிருபாவதியைப் பார்க்க ஆவல்கொண்டு ஒருமாதம் லீவும் வாங்கச்செய்து இருவரும் வந்தோம். வளைகாப்பு, சீமந்தம் கழித்துதான் போவோம். உட்காருங்கள் மாமீ! கோமதீ! மாமிக்குக் காப்பி கொண்டு வா" என்றுள்.

இந்த வார்த்தை எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் தோன்றியது. "ஆமாண்டியம்மா! என்கதி இனிமேல் வருகிற கழுதைகள், போகிற நாய்கள் விசாரிக்கும்படியாகத்தான் ஆய்விட்டது. அதற்காகத்தான் உன் கணவன் ஒரு

சமயல்காரியின் சம்மந்தத்தை என் தலையில் கட்டிவிட்டு அந்த அசட்டுப்பிள்ளையிடம் பணத்தையும் சுரண்டிக் கொண்டு போகத் தெரிந்தது, அழகான பெண்ணாகையால் தனக்கும் ஒரு கை... என்று கூறுவதைத் தாங்கமாட்டாது கண்ணம்மாளும் கிருபாவதியும் அப்படியே அலறிக்கொண்டு எழுந்தார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த நாகராஜனை அப்படியே தீக்குழியில் போட்டுப் பொசுக்குவதுபோல் இருந்தது. முரளியின் கண்கள் நெருப்புப் பொறியைக் கக்குகின்றன. ‘பெத்த தாயாயினும் சரி. ஒரே அறை அறைந்துவிடலாமா!’ என்றுகூடத் தோன்றியது.

நாகராஜனால் நிற்கவேமுடியாது தேகம் பற்றி எரிகிறது. இன்னது சொல்வதென்றே தெரியவில்லை...பார்வதியம்மாளின் போக்கு இத்தனை விபரீதத்திலிருப்பதை இப்போதே உணர்ந்தானாதலால் அவன் கோபம் எல்லைகடந்தது...“மாமீ!... உன்னை நான் என் பெத்த தாயாரைப்போல் எண்ணி இந்த நிமிஷம்வரையில் அன்பும், பக்தியும் செலுத்திவந்தேன். நீ இத்தகைய அரக்கி, ராக்ஷஸி, நன்றி கெட்டபன்றி என்பதையறிய என் இதயம் கொதிக்கின்றது. நீ நினைக்கிறபடி அல்ப விஷயத்திற்கோ, அநியாய விஷயத்திற்கோ, என் கால் செருப்பில் ஒட்டிய தூசிகூட ஆசைப்படாது என்பதை இனியாவது தெரிந்துகொள்ளு. நான் என் உடன்பிறந்த சகோதரனைப்போன்று முரளியை நேசிப்பதும் அவனிடம் நான் நிஷ்களங்கமாக நடந்துகொள்வதும் பகவானுக்கு வெளிச்சம்.

உன் வினை உன்னை அழித்து அதம் செய்துவிடும் என்பதை மறக்காதே. அக்ரமமாகக் கூறும் வார்த்தைகளைப் பகவான்கூட கேட்டுக்கொண்டு சும்மாயிருக்கமாட்டார். எந்த வாயால் நீ இப்படி அபாண்டபழியைச் சுமத்தினாயோ, அந்த வாய் புழுத்துப்போய்விடும். ஜாக்ரதை...கண்ணம்மா! எழுந்து வா... அம்மா! கிருபாவதீ! இந்த மகா பாவி தனக்கு த்ரோகம் செய்ததாக வசைகூறுகிறாள். உண்மையில் ஒப்புயர்வற்ற தங்கத்தை, இந்த பாதகியிடம் கொண்டு சேர்த்ததால் உனக்குத்தான் நான் பெருந் த்ரோகம் செய்தவனானேன். உன் கணவன்தான் உன்னைக் காப்பாற்றி இந்தப் பூனையின் வாயிலிருந்து கிளியாகிய உன்னைத் தப்புவிக்கச் செய்யவேண்டும்...அப்பா! முரளீ! கடவுள் உங்களைக் காப்பாராக. நம் சினேகம் இதயத்திற்குள் என்றும் நீடித்திருக்க அருள் புரிவாராக. அப்பா வந்தால் சொல்லு. நான் போகிறேன்” என்று வெகு ஆவேசத்துடன் கூறியவாறு மனைவியுடன் தடதடவென்று கிளம்பினான்.

முரளி எத்தனையோ தடுத்தும் அவன் கேட்கவில்லை. தாயாரிடம் முரளி வெகுவாய் சண்டைசெய்து திட்டினான். எதுசெய்து என்னபலன்? மனமுடைந்து சென்ற நாகராஜனின் பிம்பமே கண்முன்பு தாண்டவமாடியது. நாகராஜன் எங்கு சென்றான், எப்படி சென்றான் என்றுகூடக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நாகராஜனின் அருமையான சினேகிதத்தை இழந்துவிட்டதுபோன்ற ஒரு உணர்ச்சியே முரளிக்கு உண்டாகி மிக்க விசனத்தையளித்தது. தன் தாயாரின் மீது உண்டாகிய கோபத்திற்கு எல்லையே இல்லை. நாகராஜன் நேராக ஊருக்குத்தான் போயிருப்பான் என்றுமட்டும் தெரிந்துகொண்டு எத்தனையோ வணக்கமாகக் கடிதமெழுதி மன்னிப்பையும் வேண்டினான். எதுசெய்து என்ன பலன்? முறிந்த பால் மீண்டும் நல்ல பாலாகுமா! ‘மறுபடியும் என்று நாகராஜனின் களங்கமற்ற நட்பைப் பெறலாம்’ என்கிற ஏக்கங்கூட உண்டாகியது.

## 18

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகிவிட்டன. கிருபாவதியின் பெற்ற தாயார், கண்ணால் பார்க்காமலேயே கிருபாவதி ஒரு அழகிய பெண் குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். தான் தாயாகியபிறகே, ஒரு பெற்ற அன்னையின் இதயம் எத்தகைய உணர்ச்சியை அடையும், எத்தகைய நிலையிலிருக்கும் என்பதை நன்கு அறிந்துகொண்டு பின்னும் விசனிக்கத் தொடங்கினாள்.

தன் தாயார் பரம ஏழையாயினும் இதயபூர்வமாக உதிக்கும் சுகமோ, துக்கமோ இரண்டும் அனுபவிக்கும் உணர்ச்சியில் குறைந்துவிடாதல்லவா! தன் மாமியார் தன் குழந்தையை வைத்துக்கொண்டு குலாவுவதுபோல் தன் தாயாரும் குலாவும் பாக்யம் பெற்றிருந்தும் அது பலித்து இன்பமளிக்காது துர்ப் பாக்யத்தில் புகுத்திவிட்டதே, என்று நினைத்து நினைத்துக் கண்ணீர் உதிர்த்தாள்.

அழகு வெள்ளமே கரைபுரண்டு வந்ததுபோல் பிறந்துள்ள குழந்தையின் முகத்தைப் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரித்தது. "குழந்தை பிறந்த விஷயத்தைக்கூட என் தாயாருக்குத் தெரிவித்தார்களோ! இல்லையோ!" என்று கலங்கினாள். பார்வதியம்மாளுக்கு "சமையல்காரியின் மகள், சமையல்காரியின் மகள்" என்று மனத்தில் உறுத்திக்கொண்டிருந்தபோதிலும் ஸௌந்தர்யப்பதுமை போல் பிறந்துள்ள பேத்தியைக் கண்டதும் ஆனந்தம் அளவளாவிப் பொங்கி மெய்மறக்கச்செய்தது.

குழந்தையின் முதல் கல்யாணமாகிய காப்பிடுவது, தொட்டில் போடுவது முதலியவைகளை வெகு சிறப்புடன் நடத்தி, வைர ஹாரம் வைர வளையல் முதல் அந்தப் பச்சைக் குழந்தைக்குச் செய்து போட்டு இன்புற்றாள். தன்னுடைய கரைகாணாத ஆசையில் குலாவும் தோரணையில், "என் ராசாத்தீ! என் இன்ப ஜோதீ! நீதான் என் ஜீவநாடி! நீதான் என் உணர்ச்சியின் வெள்ளம், நீதான் என் அன்பின் சிகரம்...என் கண்மணியை அந்தப் பிச்சைக்கார சமையல் காரியின் கண்ணில் காட்டினால்கூட தரித்திரம் வந்து மூடிவிடும். என் பச்சைக் கிளியை பஞ்சணையில் வைத்து எத்தனையோ சிறப்பாக வளர்க்கப்போகிறேன்" என்று கூறுவதைக் கேட்க கிருபாவதியின் உள்ளம் மெழுகாயுருகித்தவிக்கும்.

ஒருதினம் குழந்தையை மடியில் விட்டுக்கொண்டு கிருபாவதி கொஞ்சிக் குலாவி முத்தமிட்டவண்ணம், "கண்ணு! உன்னை உன் பாட்டி எப்போ பார்ப்பாள்? அவள் ஆவல் நிறைந்த முத்தங்களை எப்போது உனக்குக் கொடுப் பாள்? ஏழைப் பாட்டியிடம் வேறு வைரமும் தங்கமும் ஏதடா கண்ணு! விலை யிலாத அன்பும் மதிப்பிலாத ஆசியுந்தான் கிடைக்கும். அதற்கு நிகர் உலகில் வேறு என்ன இருக்கிறது?' என்று கொஞ்சும்போது குழந்தை ஹரிமிர்ட்டலின் அழுகையும் சிரிப்பும் சிரித்தது.

அச்சிரிப்பின் களை அக்குழந்தையின் வசீகரத்தை ஆயிரம்மடங்கு அதிகரிக் கச் செய்துப் பளிச்சென்று ப்ரகாசத்தை உண்டாக்கியதைக் கண்டு கிருபா வதியின் இதயம் அமிருதம் தோய்ந்ததுபோல் இன்புற்றது. அதே சமயம் முரளி அங்குவந்து கிருபாவதியின் பின்புறமாக அவள் கன்னங்களில் கைவைத்துப் பின்புறம் திருப்பி அவள் முகத்தோடு முகம் பதித்து "க்ருபாவதீ! இதற்கு நிகர் உலகில் வேறு ஏதாவது உண்டா! நீ சாதாரண நாட்களில் இருந்த அழகைவிட கர்ப்பவதியாயிருந்த காலத்தில் பின்னும் அழகாக ஜ்வலித்தாய். இப்போதோ என் கண்களே எங்கு உனக்கு த்ருஷ்டியை உண்டாக்கிவிடுமோ என்று அஞ்சும் படியாக அத்தனை எழிலுடன் ப்ரகாசிக்கின்றாய்.

அம்மா டாம் நான்ஸென்ஸ் வழக்கத்தைவிடாது, உன்னைப் பார்க்கக்கூடாது பேசக்கூடாது என்று சட்டம் போடுவதைச் சகிக்கமுடியாது தவித்தேன். அம்மா எப்போது வெளியே போகிறாள் என்று காத்திருந்தேன். இந்த அழகைக் கண்டு ஆனந்திக்காத கண்களும் கண்களா! கிருபாவதீ! நீயும் உன் மகளும் அழகில் போட்டிதான் போடுவீர்கள்போலிருக்கிறதே. கிருபா! பொய் சொல்லாது சொல்லு. உங்கம்மா வரவில்லையே என்று உனக்குக் குறைதானே... ஆம்...குறையாகத்தானிருக்கும். நான் என்ன செய்வேன்? அம்மாவை மீறி எதையும் செய்யக்கூடாது. மாத்ருதேவோபவ...என்றதை மறந்துவிடாதீர்கள் என்று நீயே என்னைக் கட்டுப்படுத்துகிறாய்.

அப்பாவும் உன் தாயாருக்குக் கடிதமெழுதினாராம். "கடவுள் கிருபையால் குழந்தையும் தாயும் க்ஷேமமாயிருக்கவேண்டிப் பகவானை ப்ரார்த்திக்கிறேன்" என்று உன் தாயார் பதில் எழுதிவிட்டார்களாம். நாகராஜனுக்கும் கடிதமெழு

தினேன், அவன் சந்தோஷத்தினல் பூரித்தாளும். கல்கண்டு வாங்கி வழங்கினளும். கோயிலில் அர்ச்சனை செய்தாளும், குழந்தையும் நாமும் சந்தோஷமாயிருக்க பகவானை ப்ரார்த்தனை செய்தாளும். முடியுமானல் குழந்தையை ஒரு புகைப்படம் பிடித்து அனுப்பும்படி எழுதினன். அம்மாவின் ராக்ஷஸத்தனத்தின் அலங்கோலம் இப்படியிருக்கிறது. என்ன செய்வேன்?'' என்முன்.

கிருபாவதிக்கு முதலில் மிக்க நாணமும் நடுக்கலும் அவளை யறியாது உண்டாகியது. பிறகு சற்று சாமாளித்துக்கொண்டு வார்த்தைகளைக் கேட்டுக் கண்ணீர் உதிர்த்தாளேயன்றி பதில்பேச லஜ்ஜை இடங் கொடுக்கவில்லை.

பின்னும் சில நிமிஷங்கள் கழித்து...''அம்மா வந்தால் மறுபடியும் ஒரு சத்யாக்ரகம் நடக்கப்போகிறதே என்று பயமாயிருக்கிறது. **கிணற்று நீரை வேள்ளம் கோண்டுபோய் விடாது.** தயவுசெய்து நீங்கள் வெளியே போய் விடுங்கள்'' என்று தாழ்ந்த குரலில் கூறினள்.

**முரளி:**—அடி அசடே! இதற்காகவா உன் தேகம் இப்படி நடுங்குகிறது? சேசே! பயித்தியம்! அம்மா வந்தாலும் போகமாட்டேன்; பாட்டி வந்தாலும் போகமாட்டேன். உனது குரலைக் கேட்டே ஒரு மாதமாகிவிட்டதால் எனக்குப் பயித்தியம் பிடித்தமாதிரியாகிவிட்டது. எங்கே! எங்கே! இதோ பாரேன். ஒரே ஒருதரம் அந்த இன்பகாதத்தைப் பொழிந்து மெல்லிய குரலால் பாடு. கேட்டு விட்டு ஓடிவிடுகிறேன்...

**கிரு:**—ஐயோ! பயமாயிருக்கிறதே! அம்மா வந்துவிட்டால்...

**முர:**—மறுபடியும் அதையே சொல்லாதே...குழந்தைக்குத் தாலாட்டு பாடினேன் என்று சொல்லிவிடலாம். எங்கே...பாடு கிருபாவதீ!—என்று அன்பு மிகுதியால் அவளைக் கட்டித் தழுவி...

அடுத்த நிமிடமே அவளது மதுரகண்டத்திலிருந்து மிகவும் மெல்லிய குரலில்,

(தாராஜகி என்கிற ஹிந்தி மெட்டு.)

**தாரணியின் ஜோதி ஸ்வரூப ஹரே...ஏழை ஜனநேசா!**
**இன்போல்லாஸா! ஜகத் தோத்தார...ஹரே...!**
**சோதித்தல்...சகித்திடேன் கண்ணு...**
**பிறவித் துன்பம் தவிர்...**

என்று பாடுவதைக் கேட்ட முரளி தன்னையே மறந்து ஆனந்தப் பரவசமாகிக் கண்ணில் நீர் கூட முட்டிவிட்டது. "ஹா! ஹா!" என்று சிரக்கம்பம் செய்து க்ஷணநேரம் அப்படியே மயங்கிக்கிடந்தான்...அச்சமயம் அவனது சமாதி நிஷ்டையைக் கலைப்பதுபோல் குழந்தை "குவ்வா! குவ்வா!'' என்று அழுததானது அந்த சங்கீதத்திற்கு ச்ருதிகூட்டியதுபோலிருந்தது.

முரளி குழந்தையை வாரி யணைத்துப் பல முத்தங்களிட்டு, "கண்மணீ! **ப்ரேமாமணீ!** நீ உன் தாயாரைப்போல் பாடுவாயா...உன் தாயாரின் மதுர கீதம் உன்னிடமும் பிரதிபிம்பமாக உதிக்குமா! என் காதாரக் கேட்டு மகிழ்வேனு?'' என்று கொஞ்சிக் குலாவினன்: தன் குழந்தை என்ருல் யாருக்குத்தான் இனிக்காது. தன் தாயாருக்குத்தான் அந்த பாக்யம் அற்றுவிட்டது என்ற உணர்ச்சி க்ருபாவுக்குச் சற்று தலைதூக்கியது. அந்த வேகத்தின் சாயல் முகத்தில் இலேசாக விசனம் பாசிபோல் படிந்தது. அடுத்த க்ஷணமே அதைக் கணவன் அறியாதவாறு மறைத்துக்கொண்டாள்.

முரளி குழந்தையை கிருபாவதியின் மடியில்விட்டு குழந்தையின் முகத்தையும் கிருபாவதியின் முகத்தையும் மாறிமாறிப் பார்த்தான். "ஆஹாஹா... நான்தான் பாக்யசாலி! ஒரு அழகு தேவதைக்குப் பதில் இரண்டு ரத்தினங்களாகிவிட்டன. ஊம்...ஆனல் உன் தாயார் பார்க்காத குறை உனக்குப் பூர்ணமாயிருக்கிறது. கிருபாவதீ! இப்போதும் பாதகமில்லை. உன் தாயாரை வர வழைக்கட்டுமா!'' என்முன்.

கிரு:—ஐயோ! வேண்டாம்! வேண்டாம்! வரவழைத்து அவமானத்தைப் பருமானமாகக் கொடுத்தனுப்புவதைவிட அவள் வராமல் ஒரே கவலையால் வாடுவதே மேலானது... உங்களுக்குப் புண்ணியமுண்டு. அம்மாதிரிச் செய்து விடாதீர்கள். உங்களை மிகவும் கேட்டுக்கொள்கிறேன்!—என்று கூறும்போது அவள் குரல் சோகத்தால் கம்மி கண்களில் நீர் மளமளவென்று உதிர்ந்தது.

இதைக்கண்ட முரளியின் மனதும் துடித்தது. கிருபாவதியின் கண்களைத் துடைத்து அவள் முகத்தைத் தன் மார்புறத்தழுவி அவள் தலையில் தன் முகத்தைப் பதித்துக்கொண்டு, "கிருபாவதி! இன்னும் கொஞ்சநாள்தான் இந்த சங்கடம். என்னைக் கட்டாயம் ஆபீஸில் மாற்றிவிடப்போவதாகத் தெரிந்துவிட்டது. அப்படி மாற்றிவிட்டால் நாம் தனியாகப் போகும்போது சகாயத்திற்கு உன் தாயாரை நான் எப்படியும் அழைத்துப்போவேன். நீ இப்போது படும் கஷ்டமெல்லாம் அப்போது நித்ய சுகமாக மாறிவிடும். கண்ணீர்விடாதே... என்று அன்பு பொங்கத் தேற்றினன்.

கிருபாவதியின் இதயம் உருகிக் கரைந்தது. முரளியின் மார்பில் புதைந்த படியே, "ஆகா! எனக்கு அந்த நிலையை நித்யசுகம் என்று நினைக்கிறீர்களா! இல்லை! இல்லை... என் இன்பதுரையாகிய, என் ஆவிக்கமுதம் போன்ற தங்களுடைய அன்பும், ஆதரவும் ப்ரீதியும்தான் நித்ய சுகம். அதுதான் எனது ஜீவியத்தின் ஸார்த்தகம், அதுதான் பிறவியின் பொக்கிஷம். அந்த இன்பத்தைத்தான் நான் என் வாழ்நாள் முற்றும் விரும்புகிறேன். அவரவர் விதிவழி மற்றவை நடக்கிறது. எந்த மாற்றல்கள் வந்தாலும் தங்கள் தாயாரை விரோதித்துக் கொள்ள நான் ஒருபோதும் சம்மதப்படவேமாட்டேன் என்னுடைய க்ஷேமத்தைக் கோரியும் கேட்டும் என் தாயார் மகிழ்வதே போதும்......ஐயோ......அம்மா வந்துவிடப் போகிறுர்களே!...

முரளி:—கிருபாவதி!... இதோ போய்விடுகிறேன்... நேரமாகிறது... அம்மா வந்தால்கூட அம்மாவின் பூச்சிக்கு இனி நான் பயப்படமாட்டேன்... நான் அடிக்கடிதான் வருவேன்... ஆனல் பாடவிடுவாளோ! மாட்டாளோ! எங்கே... இன்னெருதரம் அந்த மதுரகீதத்தை என் செவிக்கு விருந்தாக அளித்து என்னைக் களிப்புறச் செய்...அந்த இன்ப அலை மோதும் உணர்ச்சியுடன் நான் போகிறேன். பாடு... கிருபா!...

**தாரணியின் ஜோதி ஸ்வரூபஹரே...**

என்ற நாதம் முன்னைவிட இப்போது பின்னும் சற்று உரத்த குரலில் கணீரென்று எழுந்தது. அந்தப் பாடலின் ஆத்ம சுவையும், மனமுருகி அனுபவித்துப் பாடும் உணர்ச்சியின் வசீகரமும் குரலின் இனிமையும் ஒன்றுகூடி முரளியை முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த ஆனந்த சாகரத்தில் மூழ்கச்செய்து ப்ரம்மானந்த நிலையை அளித்தது.

[library stamp]

## 19

"அடாடா! என்ன அழகு! என்ன அழகு! அந்த பத்ரகாளியம்மாளின் ஆசை இதில்கூட பூர்த்தியாகிவிட்டது கண்ணம்மா! படத்தைப் பார்த்தபிறகு குழந்தையை நேரில் பார்க்கவேண்டும்போல் மிகவும் ஆவலாக இருக்கிறது. போகவும் மனது இடங் கொடுக்கவில்லை. என்ன செய்வது!" என்று நாகராஜன் அங்கலாய்ப்புடன் முரளியின் குழந்தையின் புகைப்படத்தைப்பார்த்துக்கூறினன்.

தம்பதிகள் மாறிமாறி படத்தைப் பார்த்து மெய்மறந்தார்கள். "ஊம்... ஐயோ பாவம்! நாமாவது புகைப்படத்தில் பார்க்கிறேம். கிருபாவதியின் தாயார் அதுகூட பார்த்திருக்கமாட்டாள்...ஒன்று செய்வோமா! இதை அந்தம்மாளுக்கு அனுப்பி, பார்த்தபிறகு திருப்பியனுப்பும்படி எழுதலாமா! இதிலாவது கண்டு, களித்து சிறிது ஆறுதலடையட்டும். குழந்தையின் வளர்த்தியைப் பார்த்தால் 6 மாதம் 7 மாதம் சொல்லலாம்போலிருக்கிறது. மூன்று மாதத்திலேயே இத்தனை வளர்த்தி என்றல் குழந்தை வெகு கம்பீரமாய் கிருபாவதியைப் போலவே இருக்கும்"... என்றுன்.

**கன்:**—ஆமாம்...நானும் அப்படித்தான் நினைக்கிறேன். நீங்கள் இன்றைய தபாலிலேயே அனுப்புங்கள் பாவம்; பெத்தவயிற்றின் தவிப்பை அந்தப் பேராசைக்காரி எங்கு அறியப்போகிறாள், அந்த ராக்ஷஸி ஒரு மனுஷியா...ஆதியில் லங்கிணி, தாடகை, பூதனை என்றிருந்தார்களே, அவர்களின் அம்சத்தைச்சேர்ந்தவளே அந்தப் பரதேவதை—என்றாள்.

நாகராஜன் அன்றே படத்தைத் தபாலில் ராஜம்மாவுக்கு அனுப்பினான். ராஜம்மாளின் பரிதாபத்தைக் கூறமுடியுமா! அன்று சம்மந்தியம்மாளின் சொல்லம்பு பொற்றி அந்த பாதை தாங்கமாட்டாது வந்தவள் அதே வேதனையில் விசாரத்தில் ஏக்கம் பிடித்து உடல் மெலிந்து வீக்கத்திலும் கொண்டுவிட்டு சில மாதத்திற்குள்ளேயே படுக்கையும் பாயுமாக ஆகிவிட்டாள்.

ஆனால் தன் விதி தன்னோடு மறையட்டும், தனது தேக நிலையைப்பற்றி க்ருபாவதிக்குச் சொல்லவே வேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டதால் சதாசிவம் எழுதவில்லை. பெற்ற வயிற்றின் கொதிப்பு அடங்கிவிடுமா! கிருபாவதிக்கு யாதொரு குறைவும் இன்றி சுகமாக பிரஸவித்துத் தாயும் சேயும் நன்றாயிருக்கவேண்டுமே என்று பிரார்த்தனை செய்தாள்.

பெண் குழந்தை பிறந்தது என்கிற கடிதத்தைக் கண்டு பரமானந்தமடைந்து பூரித்தாள். அடுத்தக்ஷணமே தான் பார்க்கும் பாக்யம் செய்யவில்லையே என்று கண்ணீரும் வடித்தாள். தன் கிருபாவதியை தனது உயிர் போவதற்குள் ஒரு முறை பார்க்கமுடியுமா! அவளுடைய அதி அத்புதமான மதுரகீதத்தை ஒரு முறை கேட்கமுடியுமா!'' என்கிற ஏக்கம் அவளை மீறிச் சூழ்ந்துகொண்டது.

தேகத்தில் பாதை ஏற ஏற கிருபாவதியின் நினைவும் அளப்பரிய ஆர்வமும் புத்திர வாத்ஸல்யமும் தடுக்கமுடியாத வேட்கையும் அதிகரித்தன. சதா, "கிருபாவதி! கிருபாவதி!'' என்று பிதற்றவும் ஆரம்பித்தாள். அச்சமயத்தில் நாகராஜன் அனுப்பிய படங்கள் வந்தன. ஒன்று கிருபாவதி குழந்தையை வைத்துக்கொண்டிருப்பது. மற்றொன்று குழந்தைமட்டும் தனித்தது.

இவ்விரண்டையும் பார்க்கப் பார்க்க ராஜம்மாளின் ஆனந்தம் கரைபுரண்டது. படத்தை படமாக நினைக்காமல் நேரில் பார்ப்பதாக எண்ணிக் கண்ணீர்விட்டு முத்தமிட்டு வாய்ப்பிதற்றி பூரித்துப்போனாள். "கிருபாவதீ! உன்னைப் பார்த்துவிட்டேன். ஆனால் உனது மதுர கீதத்தை எப்படிக் கேட்பது?...ரேடியோவில் உன்னைப் பாடவேண்டாமென்று ஆதியில் தடுத்த நானே இன்று நீ பாடினால் கேட்கலாம்போல் மனது துடிக்கிறதே...உன் விவாகத்திற்குப் பிறகு நீ எத்தனையோதரம் பாடியபோதெல்லாம் என் மனது கொதித்தது. வயிறு எரிந்தது. அந்தப் பாழாப்போன ரேடியோதான் உன்னை என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போய்விட்டதாக என் இதயம் சகிக்கக்கூடாத வேதனையுடன் தத்தளித்து ரேடியோவையே சபித்தது...

ஆனால்...அதே இதயம் இப்போது உன் குரலையாவது கேட்கும் பேராவல் தாகத்தினால் தவிக்கின்றது...அதே ரேடியோவிலாவது உன் குரல் கேட்காதா! என்று ஏங்குகிறது...என் துரதிருஷ்டத்தில் அதுவும் கிடைக்காதுதான் போகுமோ என்னவோ!...என்று வாய்விட்டுக் கதறிக் கண்ணீர் பெருகும்போது சதாசிவன் நாகராஜனின் கடிதத்தைப் படித்து முடித்து ராஜம்மாவிடம் வந்தான்.

"ராஜம்! நாளை இரவு நம் கண்மணி கிருபாவதி ரேடியோவில் பாடுகிறாளாம். நாகராஜன் அதைக் கடிதத்தில் எழுதியிருக்கிறார். உன்னால் 5 மைல் வண்டியில் வரமுடியுமா! கால் கைகள் இத்தனை வீங்கி இருக்கிறதே'' என்றான்.

பிறவிக் குருடனுக்கு திடீரென்று கண் தெரிந்ததுபோலான பேரானந்தத்தை யடைந்த ராஜம்மாள் ஒரு புதிய பலத்துடனும் உத்ஸாகத்துடனும் துள்ளுதுள்ளியவாறு "ஆகா...குழந்தை பாடுகிறாளா...என் கண்மணி பாடுகிறாளா... அண்ணா! இந்த ப்ராணன் போவதற்குள் ஒருதரம் என் கண்மணியின் அத்புதமான மதுரகீதத்தைக் கேட்டுவிட்டுச் சாகட்டும்...பகவான் என் பரிதாபத்திற்கிரங்கிதான் நாகராஜன் மூலம் இந்த மகோபகாரத்தைச் செய்திருக்கிறார். நாம்

வண்டியிலேயே போய் அந்த ரேடியோ பாடும் தோட்டத்தில் வண்டியுடனேயே இருந்து கேட்டு மனதார ஆனந்தத்தை அனுபவித்துவிட்டு வருவோம். அப்படி வழியில் என் ப்ராணன்போனாலும் போகட்டும். நீ தடைசெய்யாதே... அண்ணா... ஒருதரம் என் காதாரக் கேட்கும்படிச் செய்துவிடு'' என்று கெஞ்சினாள்.

சதாசிவனுக்கு மட்டும் பெரிய யோசனைதான். இருப்பினும் ராஜம் பிழைப்பது இனி இந்த ஜென்மாவில் இல்லை. தராதரம் இல்லாத பணக்கார சம்மந்தம் என்கிற பெரிய நோய் அவளை விழுங்கி ஏப்பமிடும் எமனாகிவிட்டது. கடைசீ காலத்தில் இந்த ஆசையாவது நிறைவேறட்டும் பாவம்...சேச்சே..என்ன வித்யாஸ சம்மந்தம்... இம்மாதிரி சம்பந்தத்தின் கேடு இத்தகைய விபரீதமாயிருக்குமென்பதை யறியாது காலைவைத்துவிட்டதன் பலன் இதான்... இப்படியுமா ஒரு மனுஷியிருப்பாள்!... என்று தனக்குள் ஏதேதோ எண்ணி மனது தவித்தார்.

"பணத்திற்குமட்டும் ஆசைப்பட்டுக்கொண்டு இத்தகைய வித்யாச சம்மந்தத்தை இனி உலகில் யாருமே செய்யவேண்டாம். இப்படி செய்து பெண்ணை அடியோடு துறப்பதைவிட கிணற்றில் தள்ளிவிடலாம்'' என்றுகூட அவருக்குத் தோன்றியது.

## 20

இதுகாறும் பாடியதைவிட இன்று கிருபாவதி பாடியது வெகு அத்புதமாக அமைந்ததானது அவளையே மெய்மறக்கச் செய்தது. ரேடியோ நிலயத்திலிருந்த பெரிய உத்யோகஸ்தர்கூட கிருபாவதியை நேரில் கண்டு "இன்றைய சங்கீதம் சாதாரண சங்கீதமல்ல, உயர்தர கச்சேரிக்கொப்பாகவே சொல்லலாம். பல ரஸிகர்கள் உடனே டெலிபோனில் தமது சந்தோஷத்தைத் தெரிவித்து உங்கள் மதுரகீதம் வெகு அருமையாயிருந்ததென்று உங்களிடமும் கூறச்சொன்னார்கள்'' என்று தெரிவித்தபோது முரளியின் இதயம் மலர்ந்தது. ஆனால் கிருபாவதியின் நினைவு ஒரே தாவாகத்தாவி தன் தாயாரிடம் சென்று ஏங்கியது.

வீட்டிற்கு வந்தவுடனே பாராட்டு உரைகள் டெலிபோன்மூலம் பறந்தன. அதிலும் **"தாரணியின் ஜோதி''** என்கிற பாடலை ப்ரத்யேகமாகப் புகழ்ந்து சொல்லியதைக் கேட்ட முரளிக்குக் கூறத்திறமற்ற சந்தோஷம் பொங்கியது.

மறுதினம் காலையில் வந்த தபாலில் அருகில் உள்ள ஊர்களில் கேட்ட சங்கீத ரஸிகர்கள் மிகவும் பாராட்டி எழுதியிருந்தார்கள். அதில் நாகராஜனின் கடிதமும் ஒன்று. அவன் சங்கீதத்தைப் பாராட்டி எழுதியதோடு கிருபாவதிக்கு த்ருஷ்டி கழித்து விபூதி மந்திரித்துக் கொடுக்கும்படிக்கும் எழுதியிருந்தான்.

கிருபாவதியின் கான மழையில் முரளி மிதந்துபோய் இந்த பாராட்டுக் கடிதங்களை அவளுக்குப் படித்துக் காட்டியவாறு, "கிருபாவதீ! இந்தமாதிரியான ஆனந்தம் என்று வரும் என்று நான் வெகு ஆவலுடன் எதிர்பார்த்தேன். எங்க ஆபீஸில் எனக்குமேலுள்ள அதிகாரி இதோ பாராட்டுக் கடிதம் எழுதி, உன்னைப் போன்ற பாக்யசாலியில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார் பார்த்தாயா! அவரும் என்னைப்போல் அதே பாட்டைத்தான் வெகுவாய் ச்லாகித்திருக்கிறார்...

பின்னணி சங்கீதத்தின் அபார அழகும் உன் கானமும் ஒன்று சேர்ந்து நேற்று மிகமிக சோபையுடன் விளங்கியது. அதை இப்போதொருதரம் பாடேன். கிருபா!... எங்கே. ஒருதரம் பாடு, கேட்கிறேன்'' என்று அன்பு மயமாய்ப் பொங்கும் பார்வையுடன் கேட்டான்.

கிருபாவதி அதே **"தாரணியின் ஜோதி ஸ்வரூபஹரே''** என்கிற பாடலை வெகு உருக்கமாகப் பாடினாள். முரளி மெய்மறந்து கேட்டுக்கொண்டிருக்கையில் "ஸார்! யாரோ ஒரு ஆள் வந்திருக்கிறான். இந்த கடிதத்தைக் கொடுத்தான்'' என்று வீட்டு வேலைக்காரன் கடிதத்தைக் கொடுத்தான்.

முரளி கடிதத்தை வாங்கிப் பார்த்ததும் சற்று திகைத்தான்..."கிருபாவதீ! உன் மாமாவின் கையெழுத்துப்போலிருக்கிறதே!'' என்றான். கிருபாவதி பாடுவதைச் சடக்கென்று நிறுத்திவிட்டு பரபரப்புடன்... என்ன என் மாமாவா?... என்ன எழுதியிருக்கிறார்?... "படியுங்கள்'' என்று ஆர்வத்துடன் கூறினாள்.

## மதுர கிதம்

"ஸ்ரீமான் சம்மந்திக்கு நமஸ்காரம், உபயக்ஷேமங்கள். நாம் சம்மந்தம்செய்த இத்தனை வருஷங்களுக்குப்பிறகு இம்மாதிரி ஒரு கடிதம் எழுதும் சந்தர்ப்பமாவதுவரும் என்றுதான் எதிர் பார்த்தேன். ஆனால் இத்தனை விரைவில் எதிர்பார்க்கவில்லை. என் சகோதரி யின் பரிதாபத்தைக் கண்டு மனிதர்கள் இரங்காவிடினும் பகவானாவது இரங்கிவிட்டதை நான் மிகவும் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். மலைக் கும் மடுவுக்குமுள்ள சம்மந்தத்தைச் செய்தபிறகு அவள் அடைந்த பயன் பாயும் படுக்கையுமாகி வீக்கமும் கண்டுவிட்டது.

பெற்ற வயிற்றின் பாசத்தை, சங்கடத்தை, பிதற்றலை சகிக்கமுடிய வில்லை. நேற்று கிருபாவதி ரேடியோவில் பாடும்போதாவது அந்த அருமைக் குரலைக்கேட்டு மகிழபேராவல்கொண்டு மரணப்படுக்கையிலிருக்கும் அவள் துடித்தாள். சாகும் சமயத்தில் விரும்பும் இந்த ஆவலையாவது பூர்த்தி செய்ய அவளை 5 மைலுக்குப் பக்கத்திலுள்ள ஊருக்கு மாட்டுவண்டியில் அழைத்துச் சென்றேன். எங்கள் கண்மணியின் அதியத்புதமான மதுர கீதத்தைக் காதாரக் கேட்டுப் பேரானந்தமடைந்து உடல்பூரித்த வேகத்தில் அவள் இதுகாறும்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தபிணி முற்றும் குணமாகியது போன்ற ஒரு த்ருப்தி, ஒரு குதூகலம், அளவிலாத இன்பம்...மனச்சாந்தி முதலியவற்றை அடைந்துவிட்டாள். ஆகாசபுரிரேடியோவில்சங்கீதம் கேட்ப தைக்கூடத்தங்கள் தர்மபத்தினி கட்டுப்படுத்திவிடுவாளோ என்றுபயந்தாள்.

ஆனால் இன்னும் உயிர் ஊமை பிராணனை ஊசலாடுகிறது. 'வீட்டிற்கு வருவதற்குள் போய்விடுவாளோ !" என்றுதான் நடுங்கினேன். கிருபாவதி யைப் பார்க்கும் ஆவலில் துடிக்கிறாள். பிதற்றுகிறாள். ஏதோ கடைசி காலத்திலாவது அவள் ஆவலை மனித சுபாவத்துடன் நிறைவேற்றுவீர் களோ ! என்கிற ஒரு நப்பாசையால் இதை எழுதுகிறேன். உடனே வந் தால் பார்க்கலாம். இல்லையேல் சரித்திரம் முடிந்ததென்று நிம்மதி அடையலாம்.

இங்ஙனம்,

**சதாசிவன்."**

என்கிற கடிதத்தைப் படிக்கும்போது முரளியின் தொண்டையில் துக்கம் தேங்கி குரல்கம்மி கண்ணீர் முட்டியதென்றால் கிருபாவதியின் நிலைமையைக் கூற வேண்டுமா! க்ஷணநேரம் இன்னதென்று விவரிக்கவியலாதவாறு ஒரு புரட்டு புரட்டியது. அடுத்த க்ஷணமே...தன்னிருகரங்களையும் கூப்பி "என்னப்பனே ! ஸ்ரீ கிருஷ்ணா ! இந்த உலகத்தில் ஈ எறும்புமுதல் அலக்ஷியம் செய்யப்பட்டு வாடும் ஜென்மாவைப்படைத்துவிட்ட நீகூட எங்கே உதாசீனம் செய்துவிடு வாயோ ! என்று இரவு பகல் ஏங்கினேன்...அடாடா ! உன்கருணை அந்த துர்ப் பாக்யப் பிண்டத்தினிடம் சுரந்த மகிமை ஒன்றே போதும். இந்தப் பாழும் உலகில் பட்டகஷ்டம் நீங்கி உன்னடி சேர்த்துக்கொண்ட பரோபகாரத்தை எப்படித்தான் புகழ்வது ?...அம்மா! நீ இப்போதுதான் புனிதவதி...போ... போ...இந்த வஞ்சக உலகத்தை விட்டுப்போம்மா !"...என்று மிதமிஞ்சிய துக்கத்தில் தன்னையறியாது வாய்விட்டும் கூறி, உட்காரமுடியாது சுருண்டு படுத்துக்கொண்டாள்.

அதே சமயம் விச்வநாதன் தோட்டத்திலிருந்து வரும்போது ஆள் நிற் பதைக் கண்டு விசாரித்து விஷயமறிந்ததும் அவரைத் தூக்கி வாரிப்போட்டுக் கலக்கியது, "நீ வரும்போது அம்மா எப்படியிருந்தார்கள்" என்று கேட்டார்,

ஆள்:—ரொம்ப கேவலமாத்தான் இருக்கிறாங்க. கொயந்தேயேபத்திதான் வாய்பெனெத்தராங்க. சின்ன கொயந்தையே பாக்கணுமுன்னு துடிதுடிக்கராங்க. இருக்கர நெலமேயே பாத்தா இன்னேரம் உசிரு இருக்குதோ ! பூட்டுதோ! சந்தே கந்தானுங்க...பதிலு எதாச்சும் உண்டா...நான் போவட்டுமா !

அவர் மனத்தில் சொல்லவறியாத விசனமும் பரிதாபமும் பொங்கியது. "இருப்பா ! இதோ வருகிறேன்" என்று கூறிக்கொண்டே உள்ளேவந்து நேரே

முரளியின் விடுதிக்குச் சென்றார். முரளி கைக்குட்டையால் தன் கண்களைத் துடைத்துக்கொள்வதையும் கிருபாவதி பகவானைத் துதித்து வேண்டுவதையும் பார்த்த அவர் இதயம் உருகியது "அடாடா! என்ன அத்புதமான பிறவி... உம்... பெத்ததாய் இறக்கக்கிடக்கிறாள் என்று கேட்க யார் உள்ளந்தான் துடிக்காது?... "அம்மா! கிருபாவதி அழாதேம்மா! எழுந்திரு... முரளீ! நேரே காரிலேயே நாம் எல்லோரும் போய்வரலாம் என்று தோன்றுகிறது, என்ன சொல்லுகிறாய்? சாகப்போகும் சமயத்திலாவது அந்தம்மாளுக்கு மனத்தில் நிம்மதி இருக்கட்டும். கிருபாவதீ! புறப்படம்மா! என்னசெய்யலாம்.தலைவிதி"... என்று கண்கலங்கினார்.

கிருபாவதி மிக்க தாழ்மையாயும் துக்கம் தேங்கிய குரலுடனும் பேசத் தொடங்கி, "மாமா! இத்தனை நேரம் அவள் நிம்மதியை அடைந்திருப்பாள். அந்த நிலையைக் கேட்டதே எனக்குப் போதும். அங்கு எதற்குப் போகவேண்டும். வேண்டாம் மாமா... மாமிக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்வதில் நான் ப்ரவே சிக்கமாட்டேன்...

**விச்:**—குழந்தாய்! போதும் இந்த சமயம் நீ பேசுவதை நான் ஒப்புக் கொள்ளவேமாட்டேன், கிளம்பம்மா... உம்... எழுந்திரு... முரளீ! காரை எடு... ட்ரைவர் வேண்டுமா! நீயே ஓட்டுகிறாயா? என்றார். முரளிக்கு ஒன்றுமே பதில் சொல்லமுடியாது தவித்தான். கிருபாவதியின் துயரம் இவன் மனத்திலும் புகுந்து வேலை செய்தது. இச்சமயம் போய்த் தானாகவேண்டும் என்றுதான் அவனும் நினைத்தான். தானே காரை ஓட்டுவதாகக் கூறியதும் விச்வநாதன் வெளியே போனார்.

கிருபாவதியைச் சேர்த்து அணைத்துக்கொண்டு, "கிருபாவதீ! நீ புலம்பினால் என் மனம் தாளவில்லை... உன்னழகிய முகம் துக்கத்தால் சோபை இழந்து விடுமோ! என்று பயமாயிருக்கிறது. கலங்காதே... உன் தாயாரிடம் நாங்கள் பரம அபராதியாகிவிட்டோம். உன் மனத்துடிப்பு எனக்குத் தெரியாமலில்லை. அழாதே கிருபாவதீ!"... என்று பேசத் தெரியாமல் சமாதானம் செய்தான்.

விச்வநாதன் சற்று அதிகாரதோரணையில், "கோமதி! அந்த பத்திரகாளி நாளைக்கு ஊரிலிருந்து வருவாள்! வந்தால் நாங்கள் போயிருக்கும் விஷயத்தைக் கூறு" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

கிருபாவதிக்குமட்டும் தன் மாமியாரிடம் சொல்லாதுபோனால் என்ன வாகுமோ என்கிற பயந்தான் உள்ளூறப்போராடியதால் தயங்கினாள். மாம னாரும் கணவனும் சேர்ந்து வற்புறுத்துவதால் தட்டவும் முடியாது தவித்தாள். கடைசீதரமாகத் தன் தாயின் சவத்தையாவது பார்க்கவேண்டுமென்கிற ஆசையும் போராடியதால் "ஈச்வரோ ரக்ஷத்" என்று துணிவுடன் கிளம்பினாள்.

"நான் போகும்போது என் தாயாரின் சவத்தைத்தான் பார்ப்போமோ! அன்றி உயிர் இருக்குமா! ஆத்மாத்ருப்தியாகும்படி என்னையும் என் ப்ரேமா வையும் பார்த்து சந்தோஷிப்பாளா!" என்ற பெருத்த ஏக்கத்துடன் கண்ணீர் பெருகக் காரில் போகிறாள். ஒவ்வொருவருடைய மனத்தில் ஒவ்வொரு விஷயம் போராடுகிறது. காரோ, தன்னுடைய முழு வேகத்துடன் பறக்கின்றது.

## 21

"இதென்ன இது! எல்லோரும் முன்கட்டை இப்படி திறந்து போட்டுவிட்டு எங்கே போய்விட்டார்கள்? கிருபாவதீ! கோமதீ!" என்று கூவிக்கொண்டே பத்திரகாளியம்மாள் பிரவேசித்தாள். கோமதி சமையல் கட்டிலிருப்பதால் காது கேட்கவில்லை. பார்வதி நேரே முரளியின் அறையைப் பார்த்தாள். பூட்டி யிருந்தது. கிருபாவதியின் விடுதியும் பூட்டு. விச்வநாதனின் ரூமும் பூட்டு. "எல்லா வற்றையும் பூட்டிக்கொண்டு எங்கு போய்விட்டார்கள்?" என்று சீறியபடியே சமையல்கட்டிற்கு வந்தாள்.

கோமதி இந்த ஸ்வரூபத்தைப் பார்த்ததும் நடுங்கியபடியே, "இப்பதான் வரு கிறீர்களா! அடாடா! அவர்கள் எல்லாரும் போய் ஒருமணி காலங்கூட ஆக வில்லையே... சம்மந்தியம்மாளுக்கு அத்யாபத்தாயிருக்கிறதென்று ஆள் வந்தான்.

எல்லோரும் போயிருக்கிறார்கள். பாவம்! கிருபாவதியைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது"...என்று கூறி முடிப்பதற்குள் பார்வதியம்மாள் ஒரு துள்ளுதுள்ளிக் குதித்தவாறு, "ஐயையோ! வெட்கக்கேடே! அந்த சமயல்காரப் பன்னாடை சாகப்போகிறதென்றால் அதற்கு இவர்களெல்லாம் வீட்டோடு ஓடவேண்டுமா என்ன! இதென்ன மானங்கெட்டத்தனம். இவருடைய பகதூர் பட்டமென்ன! இவர் போகிற போக்கென்ன! பிணந்தூக்க அப்பனும் மகனும் சேர்ந்து போனார்களா! அந்த பச்சைமண்ணையும் பிணத்தருகில் சாவுபுருடு தாங்குவதற்கு எடுத்துக்கொண்டு போகவேண்டுமா! நான் போனவள் திரும்பி வருவதற்குள் அப்படியே செத்துவிடுவேன் என்று எண்ணிவிட்டார்களா! சமயல்காரக் கழுதைக்கே இந்த மரியாதை என்றால் தனக்கு நிகரான சம்மந்தியாயிருந்தால் கூடவே உடன்கட்டை ஏறிவிடுவார்கள் போலிருக்கிறதே...

183029

என்று கூறி முடிக்குமுன் கோமதி கையிலிருந்த கரண்டியை தடாரென்று கீழே போட்டுவிட்டு..."அம்மா! நானும் தினம் பார்க்கிறேன் உதயமானால் அஸ்தமித்தால் ஆயிரந்தரம் 'சமையல்காரக் கழுதை!' 'சமையல்கார நாய்' என்று ஓயாது சொல்வதானது என்னிதயத்தில் ஈட்டி குத்துவதுபோலிருக்கிறது. சமையல்காரர்களாயிருந்தால் மட்டும் அவர்கள் என்ன மனிதர்களில்லையா! வயிற்றுப் பிழைப்புக்கு வேலை செய்வதாலேயே அவர்களை இத்தனை இளப்பம்செய்து கூறுவதை என்னால் சகிக்கவே முடியவில்லை. இந்த சமையல்காரர்கள் இல்லாவிட்டால் பணக்காரர்களாகிய உங்கள் பவிஷு எப்படி காற்றில் பறக்கும் என்பதை மறந்துவிட்டீர்களா! நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்; என்னையும் மீறிவந்துவிட்டது. இந்த பணச்செருக்கு பிடித்த பிசாசுகளிடம் இருக்கமுடியாது. நான்போகிறேன். இதோ உங்கள் சாமான்கள்; என் பணத்தைக் கணக்கு தீர்த்துவிடுங்கள். சமையல் செய்வதாலேயே அவர்கள் குறைந்துவிடவில்லை. உங்களைப்போல் சகலவிதமான உணர்ச்சிகளுடனும், மானம் மரியாதையுடனும்தான் வாழ்கிறார்கள். உங்களைப்போன்று மனிதர்களைக் குத்திக் கொலை செய்யமாட்டார்கள். மருமகளைச் சித்திரவதை செய்யமாட்டார்கள்" என்று விடுவிடென்று கூறியவாறு வெளியே வந்தாள்.

கோமதியின் கோபம் உச்சஸ்தாயியை எட்டிவிட்டது. பார்வதியம்மாளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன் கீழ் அடிமை, தான் எப்படி சொன்னாலும் கேட்டுக்கொண்டு உணர்ச்சியற்ற கட்டைபோல் இருப்பாள் என்று எண்ணியதற்கு நேர் விரோதமாக கோமதியின் ஆவேச வார்த்தைகளைக் கேட்டதும் ஏற்கெனவே கொந்தளிக்கும் பார்வதியின் உள்ளம் பின்னும் இடிந்து போராடுகிறது. கோமதி கேவலம் ஒரு சமையல்காரி. அவளைப்போய் தான் கெஞ்சுவதா! என்கிற கர்வமும் உதித்து தலையாட்டுவதால்...

"ஏண்டீ! இத்தனைவருஷம் நாய்போல் கிடந்த உனக்கு கர்வம் திடீரென்று வந்துவிட்டதா! சமயல்காரக் கழுதைகளுக்கே நன்றி ஏது? விச்வாசமேது? அடுப்பங்கரைப் புழுக்களுக்கு அறிவேது!"...என்று கூறி முடிக்குமுன் கோமதிக்குத் தாங்கமுடியாத ஆத்திரம் பீறிக்கொண்டுவந்தது. நல்லவேளையாக அருகில் யாருமே இல்லையாதலால்..."ஏ பணப்பிசாசே!...ராக்ஷஸப் பதரே...என்ன சொன்னாய்?...என்னையா கழுதை என்றாய்...கழுதை என்னசெய்யும் தெரியுமா இப்படித்தான் செய்யும்" என்று காலாலேயே நான்கு உதை உதைத்து அவள் சற்றும் எதிர்பாராதவகையில் தள்ளிவிட்டு 'உன் பணமும்வேண்டாம். உன் பிசினாறித்தனமும்வேண்டாம். நான் சமயல் செய்து பிழைத்தாலும் நாலுபேருக்குக் கண்ணியமாய் நாணயத்தோடு மதிப்பாக பிழைப்பேன். என் கையில் தொழில் இருக்கிறவரையில் எனக்கு பயமில்லை. ஜாக்ரதை. நான்கூட உன் கைபொம்மை போல் அடங்கிக்கிடக்கும் கிருபாவதியல்ல'...என்று கூறிக்கொண்டே ஒரே விசையாகத் திரும்பிப்பாராது நடந்தாள். பார்வதியின் நிலைமையைக் கூற முடியுமா! விவரிக்கத்தான் சாத்யமேது?

# புருஷகார வைபவம்

கௌண்டின்ய

## 5. புருஷகாரம் என்றால் என்ன ?

"புண்ணியத்தைச் செய்தவனப்பா! அவன் சுகமாக இருக்கிறான்" என்றும் "மகா பாபத்தைச் செய்திருப்பதால் கஷ்டப்படுகிறான்" என்றும் சாதாரணமாக இவ்வுலகில் சொல்வதை நாம் கேட்கிறோம். எது பகவானுக்கு ப்ரீதியை உண்டுபண்ணுகிறதோ அதைப் புண்ணியம் என்றும் அவருடைய திருவுள்ளம் இல்லாமல் இருக்கும் காரியங்களைச் செய்வது பாபம் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. சேதனர்களாகிய நாம் பிரதி தினமும் கோடிக்கணக்கான பாபத்தைச் செய்கிறோம். உலக இயல்பு இப்படி இருக்கிறது. ஒரு சமயம் அந்த பகவானை நேரே அணுகி அவனை ப்ரார்த்திப்போமாகில் அவனுடைய க்ருபைக்கு பாத்ரமாவது சுலபமாக இயலாது. ஏனெனில் அவன் சாஸ்திரத்தை அனுசரித்து சிக்ஷை செய்பவனாக இருக்கிறான். நிரங்குசஸ்வதந்திரன் என்று அவனை சாஸ்திரங்கள் புகல்கின்றன. ஆகவே அவன் அனுக்ரஹம் நிக்ரஹம் இரண்டையும் செய்ய வல்லவன். இப்பொழுது நாம் லக்ஷ்மியை முதலில் பிரார்த்திப்போமாகில் அவள் நமக்கும் பகவானுக்கும் நடுவில் இருந்துகொண்டு சில வார்த்தைகளை மொழிகிறாள் "தேவரீருக்கு ஸர்வரக்ஷகன் என்ற பெயர் பிரஸித்தம். இப்பொழுது இச்சேதனனை ரக்ஷித்திடாவிடில் அந்த பெயருக்கு ஹானிவந்துவிடும். இவனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை யன்றோ பார்க்கவேணும்; இவன் நம் புத்திரன். புத்திரன் செய்தபிழையை பெற்றோர் பொறுப்பது சகஜம்; ஆகவே கட்டாயம் க்ருபை செய்து இவனை அங்கீகரிக்கவேணும்" என்று மிகவும் சாதுர்யமாக சிபார்சுசெய்து ஸர்வேச்வரனைத் திருத்தி அனுக்ரஹத்தைச் செய்விக்கிறாள். என்ன மஹோபகாரம்! இதைத்தான் புருஷகாரம் என்று நாம் சொல்கிறோம்.

## 6. பிராட்டியின் க்ருபை: எம்பெருமானின் க்ருபை—எது மேலானது ?

ஒரு குழந்தை மண்ணைச் சாப்பிடுகிறது. அதன் தந்தை அதைப்பார்த்து மண்ணைப் பிடுங்கி தூர எறிகிறார். அதை அடித்து சிக்ஷிக்கிறார். தாய் இதைப்பார்த்து ஏன் அதை அடிக்கவேணும் என்ற நோக்கத்துடன் அதை ஒன்றும் செய்வதில்லை. அழாமல் இருந்தால் போதும் என்று சமாதானப்படுத்துகிறாள். பிறகு மண்ணால் ஏதாவது தீங்கு வருமோ என்று மருந்தைக்கொடுக்கிறாள். குழந்தையின் வதனத்தில் வாட்டத்தைப்பார்க்க தாயிக்கு சகிக்கவில்லை. தந்தை, தாய் இருவருக்கும் குழந்தையிடத்தில் அளவற்ற அன்பு இருப்பினும் ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாக நடக்கிறார்கள். உலக இயல்பு இது. அதேபோல தான் நம்மிடத்தில் எம்பெருமான் ஒருவிதமாகவும், பிராட்டி வேறுவிதமாகவும் நடந்து கொள்கிறார்கள். இருவரும் நம்மிடத்தில் க்ருபை செய்கிறார்கள். யாருடைய க்ருபை மேலானது என்பது பற்றி பரமஞானிகளிடத்திலும் அபிப்பிராயபேதமிருந்துவருகிறது.

நம் ஆசார்யர்களில் பட்டர் சிறுபிராயத்திலேயே அதி ஞானத்தை அடைந்தவர், பட்டர் கோஷ்டி என்றால் அதற்கு ஒரு அலாதி பெருமைதான். ஒருநாள் ஸ்ரீரங்கம் நாச்சியார் ஸன்னிதில் அவர் காலக்ஷேபம் செய்துகொண்டிருந்த சமயம், சபையில் 'சீதாபிராட்டியின் க்ருபை பெரிதா? ஸ்ரீராகவனது க்ருபை பெரிதா?' என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அதற்குபட்டர் வெகு சுலபமாக பதில் சாதித்தாராம். "சரணம் சரணம்" என்று எவன் தன்னைத் தஞ்சமாக ரகுராமா என்னைக் காத்தருள்வாய் என்று அடைந்தானோ, அவனை ரக்ஷித்தான் ராகவன். விபீஷணன் சரணாகதியடைந்ததும், ராமன் ரக்ஷித்ததும் எல்லோருக்கும் தெரியும். சரணம் என்ற சப்தத்தை எதிர்பாராமலேயே தன்னிடத்தில் அதிகமாக அபராதத்தை செய்த ஏகாக்ஷி, ஏககர்ணி, முதலிய 700 ராக்ஷஸிகளை ரக்ஷித்தாள்பிராட்டி. மிக்க அபராதத்தைச் செய்திருந்தபோதிலும் ஒரு நன்மையையும் எதிர்பார்க்காமல் எல்லாரையும் ரக்ஷித்தாள் பிராட்டி சீதை. சந்தேகமே இல்லை பிராட்டியின் க்ருபைதான் மிகவும் போற்றப்படத்தக்கது. ஆகவே பிராட்டியின் க்ருபைக்கு ஒரு தனி மதிப்புதான் இயற்கையாகவே உள்ளது. கருணையே வடிவமாக இருக்கும் அவளிடத்தில் க்ருபையைத் தவிர்த்து வேறு எதையும் பார்க்கமுடியாது. பகவானிடத்தில் நிக்ரஹம் அனுக்ரஹம் இரண்டையும் நாம் காண்கிறோம்."

## 7. க்ருபை எப்படி ஏற்படுகிறது?

பிராட்டிக்குச் சேதனர்களின்மீது க்ருபை எப்படி ஏற்படுகிறது? அவரவர் செய்த புண்ணியத்தின் பலனாலா? அல்லது தானாகவே தாயின் உள்ளத்தில் சுரக்கின்றதா? இது விஷயமாக பெரிய ஞானிகளுக்கிடையே அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது. புண்ணியம் செய்தாலன்றி க்ருபை ஏற்படாது என்பது ஒரு அபிப்பிராயம். அப்படியில்லை; தானாகவேதான் ஏற்படுகிறது என்பது எதிர் விவகாரம். மகா அபராதத்தைச் செய்த காகாசுரனிடத்திலும் க்ருபையைக் காட்டி எம்பெருமானிடம் உயிர்ப்பிச்சை வாங்கி அளித்த பிராட்டியின் க்ருபை தானாக ஏற்பட்டதன்றோ! காகாசுரன் புண்ணியமா செய்தான்? அதே மாதிரி அசோகவனத்தில் தன்னை ஹிம்ஸித்த ராக்ஷஸிகளையும் காப்பாற்றவில்லையா அவள்? ஹனுமான் அவர்களை த்வம்ஸிக்க உத்திரவு கேட்டபோது பிராட்டி அவர்களிடம் கருணை கூர்ந்து ஹனுமான் எவ்வித உபத்திரவமும் செய்யக்கூடாதென அருளவில்லையா?